# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4 அத்தியாயம் 17

நானும் எனது சகாக்களும் பிளேக் நோயால் வருந்தியவர்களுக்கு சிகிச்சை செய்வதிலிருந்து விடு பட்டபோதெனினும் பிளேக்கால் விளைந்த பல நிலைமைகளை நாங்கள் கவனித்துக்கொண்டே வர நேர்ந்தது. இந்தியர்கள் இருந்த விடத்தைப்பற்றி முனிஸிபாலிட்டியார் எவ்வித சிரத்தையும் எடுத்துக்கொள்ளாததைக் குறித்து நான் முன்பே எழுதியிருக்கிறேன். ஆனால் வெள்ளையர் சம்பந்தப்பட்டவரையில் தங்களுடைய சுகாதாரத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களை மாத்திரம் ஜாக்கிரதையோடு கவனித்து வந்தனர். இதற்கு முன்பே முனிஸிபாலிட்டியார் வெள்ளையரின் சுகாதாரத்தை முன்னிட்டு ஏராளத் தொகையைச் செலவிட்டு வந்தனர். அவ்விதம் செய்து வந்த முனிஸிபாலிட்டியார் பிளேக் நோய் பரவிவந்த இச்சமயத்தில் இந்நோய் அவர்களைப்பற்றி விடாதபடி தடுப்பதற்காக செலவிட்டதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? பணத்தை ஜலப் பிரவாகமாகவே செலவிட்டார்கள். இந்தியர்கள் விஷயத்தில் செய்ய வேண்டியவைகளை முனிஸிபாலிட்டியார் பலவற்றைச் செய்யாமலே இருந்து வந்தனர். செய்யத்தகாத அநேக விஷயங்களைச் செய்திருக்கின்றனர். எனினும் நான் அவ்விஷயங்களையெல்லாம் அச்சமயம் பொருட்படுத்தாமல் என்னால் அவர்களுடைய பெரிய முயற்சியில் எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்து வந்தேன். நான் முனிஸிபாலிட்டியாரோடு ஒத்துழைக்காதிருந்துவிடில் அதனால் முனிஸிபாலிட்டியாருக்கு கஷ்டமுண்டாகுமென்று எனக்குத் தோன்றிற்று. அது தனது ஆயுதபலத்தைக்கொண்டு எவ்வளவு தீமைகளைச் செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்தேயிருக்கும்.

ஆனால் நிலைமையெல்லாம் மாறுதலடைந்துவிட்டது. முனிஸிபல் அதிகாரிகள் ஹிந்துக்கள் நடந்துகொண்டதில் அதிக திருப்தியடைந்தனர். பிளேக்கைத் தடுப்பதற்காக பிறகு செய்யவேண்டியிருந்த வேலைகளெல்லாம் கஷ்டமில்லாது முடிந்தன. முனிஸிபாலிட்டியாருடையவிருப்பப்படி இந்தியர் எவ்வளவு தூரம் நடந்துகொள்ள முடியுமோ அவ்வளவையும் இந்தியர் செய்யும்படி எனக்கிருந்த முழு செல்வாக்கையும் செலவிட்டேன். எல்லாவற்றையும் செய்து முடிப்பது இந்தியர்களுக்குக் கஷ்டமாகவே இருந்தது. ஆனால் எனது வேண்டுகோளை யாரும் மறித்து நடந்ததாக எனக்கு ஞாபகமில்லை.

## இந்தியர் வீடுகளுக்கு தீ.

இந்தியர் வசிக்குமிடத்தைச் சுற்றிலும் கடினமான காவலைப்போட்டார்கள். அதற்குள் போய் திரும்புவதாயிருந்தால் உத்தரவின்றிப் போகவோ அன்றி திரும்பவோ முடியாது. எனக்கும் எனது சகாக்களுக்கும் தாராளமாகப் போகவும் திரும்பவும் அனுமதியிருந்தது. இவ்விதம் செய்ததன் முக்கிய நோக்கம் அவ்விடத்தைத் தற்காலிகமாக மூன்று வாரங்களுக்குக் காலிசெய்துவிட்டு திறந்த வெளியில் கூடாரங்களடித்துக்கொண்டு வசிக்க வேண்டுமென்பது தான். அவர்கள் வசிக்கவேண்டிய திறந்த வெளி ஜோகான்ஸ்பர்க்கிலிருந்து சுமார் 13 மைல் தூரத்திலிருக்கிறது. இந்தியர்களெல்லோரும் அங்கு சென்ற பிறகு அவர்கள் வசித்து வந்த இடத்தை அப்படியே தீயிட்டுக் கொளுத்திவிடுவதென்பதுதான் இவ்வித ஏற்பாட்டின் முடிவு. தேவைக்கு வேண்டியவைகளோடு கூடாரங்களில் போய் வசிப்பதென்பது சீக்கிரத்தில் செய்துவிடக் கூடியதல்ல. அவ்விதம் செய்ய கட்டாயம் கொஞ்சம் நாள் செல்லும், இதனால் இடையில் ஏற்படும் காலத்திற்கு காவல் வைக்கவேண்டியது அவசியமாயிற்று.

ஜனங்கள் அதிகத் திகிலடைந்தனர். ஆனால் நான் அடிக்கடி அங்குசென்று தேற்றிவந்ததால் அவர்களுடைய பயம் கொஞ்சம் ஒழிந்தது. பல ஏழைகள் தாங்கள் தேடி வைத்திருந்த பொருள்களை பூமிக்குக் கீழ் புதைத்துவைக்கத் தலைப்பட்டனர். அவைகளை வெளிப்படுத்த வேண்டியிருந்தது. அவர்களுக்கு பாங்கிகளும் கிடையாது; பாங்கிகளைப் பற்றியும் தெரியாது. நான்தான் அவர்களுடைய பாங்கியாக ஆனேன். என்னுடைய காரியாலயத்தில் பணம் வந்து குவிந்துகொண்டேயிருந்தது. இந்த நெருக்கடியாகிய சந்தர்ப்பத்தில் என்னுடைய கஷ்டங்களுக்காக எவ்வித தொகையும் நான் கேட்க முடியவில்லை. எனினும் நான் வேலையைச் சமாளித்துக்கொண்டேன். என்னுடைய பாங்கியின் மானேஜரை எனக்கு நன்றாகத் தெரியும். இச்சப் பணங்களை அவரிடம் கொடுத்து வைக்க நான் விரும்புவதாக அவருக்குத் தெரிவித்தேன். வெள்ளி, செம்பு ஆகிய நாணயங்களை வைத்துக்கொள்ள பாங்கிகள் அச்சமயத்தில் விரும்பவில்லை. பிளேக்கு நோய் பரவிய இடத்திலுள்ள ஜனங்களிடமிருந்து வரும் பணத்தைத் தொடவே பாங்கி குமாஸ்தாக்கள் பயந்தார்கள். ஆனால் பாங்கி மானேஜர் எல்லா வழிகளிலும் எனக்குவேண்டிய உதவியைப் புரிந்தார். பிளேக் நோய் சம்பந்தமான பூச்சிகளொன்றும் பணத்தோடு ஒட்டிக்கொண்டு வந்து விடாதபடி பணத்தை மருந்திட்டு சுத்தஞ் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. எனக்கு ஞாபகமுள்ள வரையில் சுமார் அறுபதினாயிரம் பவுன் வரையில் பாங்கியில் கட்டப்பட்டது. அதிகப் பணம் வைத்திருந்தவர்களை ஸ்திர டிபாசிட்டில் வைக்கும்படி கூறினேன். அவர்களும் அவ்விதமே ஒப்புக்கொண்டு கட்டினார்கள். இதன் பயனாக சிலர் பாங்கியில் பணம் போடும் பழக்கத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்தனர்.

இந்தியர்கள் வசித்துவந்த இடத்திலிருந்து அவர்களைத் தனி வண்டியில் ஜோகான்ஸ்பர்க்கிற்கு அருகிலுள்ள கிளிப்ஸ் புருட் தோட்டத்திற்குக் கொண்டுபோனார்கள். அங்கே முனிஸிபாலிடியார் தங்கள் செலவில் வேண்டிய சாமான்களைக் கொடுத்தனர். கூடார வாழ்க்கை நடத்திய அனுபவமில்லாத ஜனங்கள் அங்குவசிப்பதில் அதிருப்தியடைந்ததோடு அங்கு செய்திருந்த ஏற்பாடுகளைக் கண்டு ஆச்சரியமுமடைந்தார்கள். ஆனால் அங்கு அவர்களுக்கு எவ்வித அசௌகரியமும் செய்யப்படவில்லை. நான் தினம் ஒரு முறை சைகிளில் அவ்விடம் போய் அவர்களைப்பார்த்துத் திரும்புவதுண்டு. மூன்று வாரங்கள் திறந்த வெளியில் அவர்கள் வாசஞ்செய்ததால் அவர்களுடைய தேக நிலை அதிக சுகமடைந்தது. அவ்விடத்தில் 24 மணி நேரம் வசித்தவுடனேயே அவர்களுடைய துர்ப்பாக்கியங்களையெல்லாம் மறந்து விட்டு சந்தோஷமாக வாழ ஆரம்பித்துவிட்டனர். நான் அங்கு சென்ற பொழுதெல்லாம் அவர்கள் ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

இந்தியர் அவர்கள் தங்கியிருந்த இடத்தைக் காலி செய்த மறுதினமே அவ்விடத்தைத் தீக்கிரையாக்கி விட்டதாக எனக்கு ஞாபகம். இத்தீயிலிருந்து எதையும் காப்பாற்ற முனிஸிபாலிட்டியார் கொஞ்சங்கூட சிரமமெடுத்துக் கொள்ளவில்லை. இதே சமயத்தில் இதே காரணத்தால் மார்க்கட்டிலிருந்த தேக்குமரத்தையெல்லாம் முனிஸிபாலிட்டியார் கொளுத்திவிட்டு அதனால் சுமார் 10 ஆயிரம் பவுன்வரையில் கஷ்டமுண்டாக்கினர். இவ்விதம் அநியாயமாக நஷ்டம் ஏற்படும்படி செய்ததற்குக் காரணம் மார்க்கட்டில் சில எலிகள் இறந்து கிடப்பதைக் கண்டதுதான்.

முனிஸிபாலிட்டி அதிகப்பணம் செலவிடவேண்டியிருந்தது. ஆனால் பிளேக் அதிகம் பரவாதவண்ணம் தடுத்துவிட்டார்கள், நகரமும் பழையபடி நிலை நீங்கியிருக்க வாரம்பித்தது.

# நாடார் மகாஜன சங்கம்.

## 1925 26, 1926-27-ம் வருஷங்களின் அறிக்கை.

### பிரசார மின்மையும், ஜனங்களின் அயர்வும்.

[3—10—27-ல் கும்பகோணத்தில் கூடிய வருஷாந்திர ஜெனரல் மீட்டிங்கில் காரியதரிசிகள் ஆஜர் படுத்திய அறிக்கையின் சுருக்கம்.]

கனவான்களே!

#### அங்கத்தினர்.

1925-26 ௵ துவக்கத்தில் 2053 அங்கத்தினர்களிருந்தார்கள். புதிதாகச் சேர்ந்தவர்களின் தொகை 397. ரிஜிஸ்டரிலிருந்து நீக்கப்பெற்ற அங்கத்தினர்கள் நீங்கலாக இந்த வருஷ முடிவில் திருநெல்வேலி ஜில்லாவில் 1008 அங்கத்தினர்களும், இராமநாதபுரம் ஜில்லாவில் 449 அங்கத்தினர்களும், மதுரை ஜில்லாவில் 351 அங்கத்தினர்களும், இதர ஜில்லாக்களில் 405 அங்கத்தினர்களும் ஆக மொத்தம் 2213 அங்கத்தினர்கள் இருக்கின்றனர்.

இந்த இரண்டு வருஷங்களில் வசூலான ஸ்பெஷல் அண்டு ஆர்டினரி அங்கத்தினர்கள் சந்தா தொகை ரூ 1881.

சென்ற ஜெனரல் மீட்டிங்கில் சமர்ப்பிக்கப்பெற்ற ரிப்போர்ட்டில் சொல்லிய குறையை நிவர்த்திக்கும்பொருட்டு வட ஜில்லாக்களுக்கு ஆற்றல் வாய்ந்த பிரசாரகர்களை அனுப்புவதாய் திட்டம்செய்து, மாஜி பிரசாரகர் ஸ்ரீமான் முத்துராமலிங்கநாடார் அவர்களை கோயம்புத்தூர், சேலம், ஜில்லாக்களுக்கும், மாஜி பிரசாரகர் ஸ்ரீமான் டி. கருப்பையாபிள்ளை அவர்களை தஞ்சை, திருச்சி, ஜில்லாக்களுக்கும், ஸ்ரீமான் எ. யம். எஸ். தண்ணீர்மலை நாடாரவர்களை சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு, முதலிய ஜில்லாக்களுக்கும் அனுப்பி பிரசாரம்மூலம்சங்கத்தின் லட்சியங்களைப் பரவச்செய்து அங்கத்தினர்கள் சேர்க்க ஏற்பாடு செய்ததில், கோயம்புத்தூர், சேலம், ஜில்லாக்களில் போதுமானவரை அங்கத்தினர்கள் சேருவதற்கு வகையில்லாது போயிற்றென்பதைக் குறித்து விசனிக்க வேண்டியதாயிருக்கிறது.

நமது சங்கத்தின் லட்சியங்கள் ஈடேற வேண்டுமாயின் நம் குலத்தவர்களொவ்வொருவரும் அங்கத்தினராகச் சேரவேண்டியது அத்தியாவசியம். நம் குலத்தவர்கள் யாவரும் எளிதில் அங்கத்தினராகச் சேரும் பொருட்டே ஆர்டினரி அங்கத்தினர்களின் வருஷாந்திரசந்தா ஒரு ரூபாயாக ஏற்படுத்தியிருக்கிறது. தன் குல நன்மையைக் கருதி வருஷத்திற்கு ஒரு ரூபாயாவது கொடுக்க இயலாதவர்கள் நம் ஜன சமூகத்தில் ஒருவராவது இருக்கமாட்டார்களென்பது திண்ணம். ஆகையால் நம் குலத்தினர்களொவ்வொருவரும் அங்கத்தினர்களாகச் சேரும்படி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

#### கிளைச் சபைகள்.

1935-26 ௵ ஆரம்பத்தில் 48 கிராமச் சபைகள் சங்கத்தோடு கிளைச் சபைகளாக இணைக்கப்பெற்றிருந்தன. இராமநாதபுரம் ஜில்லாவில் மூன்று கிளைச்சபைகளும் திருநெல்வேலி ஜில்லாவில் நான்கு கிளைச்சபைகளும் இதர ஜில்லாக்களில் மூன்று கிளைச் சபைகளும் புதிதாக இணைக்கப் பெற்றன. 31—3—27 வரையில் உள்ள கிளைச்சபைகளின் மொத்த எண்ணம் 58. இவ்விரண்டு வருஷங்களிலும் கிளைச்சபைகளின் மூலம் வசூலான சந்தா தொகை ரூ 108.

சங்கத்தின் லட்சியங்களையும் பிரதான நோக்கங்களையும் நமது மஹாஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி அதின் தீர்மானங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதற்கும் சங்கத்தின் பொருளாதார நிலைமை விருத்தியாவதற்கும், ஏராளமான கிளைச் சபைகள் அவசியமானதால் நம்மவர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊர்கள் தோறும் கிளைச்சபைகளும் வாசக சாலைகளும் ஸ்தாபிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம், கிளைச்சபைகளின் தொகை எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நமது பொது ஜனங்களுக்குள், ஐக்கியமும் அன்பும் அபிமானமும் அரசியல் ஞானமும் உண்டாகுமென்பது திண்ணம்.

#### தலைக்கட்டுவரி.

தலைக்கட்டுவரி விசேஷ கிளர்ச்சியுடன் 1925 ௵த்தில் மாத்திரம் பிரசாரகர்கள் மூலம் வசூலிக்கப் பெற்றது. நகரங்களிலுள்ள வர்களின் ஆக்ஷேபனையால் ஷெயார்களிடம் தலைக்கட்டுவரிக் கமிட்டி, வரி வசூல் செய்யமுடியாத காரணத்தால், கிராமங்களிலுள்ள நம்மவர்கள், நகரவாசிகளிடம் தலைக்கட்டுவரி முதலில் வசூலிக்காதவரையில் தாங்கள் கொடுப்பதில்லை யென்று சொன்னபடியால் வரி வசூல் செய்ய முடியாமற் போனது பற்றி விசனிக்கிறோம். இந்த இரண்டு வருஷங்களில் சுமார் ஒன்றரை வருஷகாலமாக சங்கம் ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் லாட்டரி விஷயமாய் வேலையை நடத்த முற்பட்டதால் தலைக்கட்டுவரி விஷயமாய் விசேஷ ஊக்கங்காட்ட முடியாமற் போயிற்று. இவ்விஷயங்களில் கிராமவாசிகளைக் குறை கூறுவதிற் பிரயோஜனமில்லை. கிராமவாசிகள் நகரவாசிகளின் முன் மாதிரியை நாடி நிற்பது சகஜமே. ஆகையால் இனிமேலும் காலதாமதம் செய்யாமல் நகரவாசிகளின் ஆக்ஷேபனைகளைத் தீர்த்து, முதலில் ஷெயார்களிடம் வரிவசூல்செய்து கொடுக்க, அபிமானிகள் முன் வருவார்களென்று நம்புகிறோம்.

#### வாரக்கொண்டாட்டம்.

ஜெனரல் மீட்டிங்கின் தீர்மானப்படி இவ் வாரக்கொண்டாட்டம் புதிதான ஏற்பாடாக விருந்தபோதிலும் அபிமானிகளின் நன்முயற்சியால் வெகு சிறப்பாய் நடைபெற்றதென்பதை சந்தோஷத்துடன் அறிவிக்கிறோம். சென்ற இரண்டு வருஷங்களாய் வழக்கம்போல் பிரசுரங்கள் மூலமாய் நமது மகாஜனங்களைக் கேட்டுக் கொண்டோம். லாட்டரியின் தீவிரப் பிரசாரத்திற்கிடையில் இவ் வைபவத்தைத் தனி சிரத்தையுடன் கவனிக்க அவகாசமில்லாமற் போயிற்று.

#### கல்வியபிவிருத்தி.

நம்மவர்கள் வசிக்கும் ஊர்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து எல்லோரும் கல்வி கற்று நம் சமூகம் முன்னேற்றமடைய வேண்டுமென்பது நமது சங்கத்தின் முக்கிய நோக்கங்களிலொன்றாகும். சென்ற சென்ஸஸ் கணக்கின்படி நம்மவர்களில் எழுதப் படிக்கத் தெரியாத ஆடவர்கள் 100க்கு 80 பேர்களும், பெண்கள் 100க்கு 98 பேர்களும் இருக்கிறார்கள். இந் நிலைமையில் நாம் முன்னேறுவதெங்ஙனம்? நமது குல முன்னேற்றத்திற்கு கல்வியே முக்கிய சாதனமென்பதை தாங்கள் எல்லோரும் அறிவீர்கள். 5 வயது முதல் 15 வயதுவரையுள்ள நம் குலச் சிறுவர்களை கட்டாயம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேண்டுமென்று நம் கான்பரன்ஸ்களில் செய்த தீர்மானத்தை ஊர்ஜிதத்துக்குக் கொண்டு வராத கிராமங்களிலுள்ள குலாபிமானிகள் வேண்டிய பிரயாசை யெடுத்து இத்தீர்மானத்தை நிலைநாட்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

நம்மவர்களின் மானேஜ்மெண்டிற்குள் தற்சமயம் 6 ஹயர்தர பள்ளிக்

(இதன் தொடர்பு 7-ம் பக்கம்பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் 11-வது மகாநாடு.

## ஜாதியின் பேரால் அல்ல;
## சகலரும் சமபங்காளிகளே.

வகுப்பு முன்னேற்ற சாதனம் பொருளாதார நிலையே.

கிராம நிர்மாண வேலையே தேசப் புனருத்தாரணம்.

சீர்திருத்தமெங்கிருக்கிறது?
பிரசங்க மட்டுமன்றி படித்த சிறுவர்களின்
செய்முறையிலேதான்.

கௌரவ அக்கிராசனர் ஸ்ரீமான் ஆர். கே. சண்முகஞ்செட்டியாரவர்கள் B. A. B. L. & M. L. A. முதல் நாள் அக்கிராசனம் வகித்து பின்வருமாறு பேசினார்கள்.

கும்பகோணம் அக்டோபர் I ௨

எழுவாய்.

கனவான்களே!

இந்த மஹாநாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை வருந்தி யழைத்துப் பெருமைப்படுத்திய உங்களுக்கு நான் மனமார நன்றி கூறுகின்றேன். பெருமையும் பொறுப்பும் வாய்ந்த இந்தப் பதவியை வகித்தற்கு என்னையே தெரிந்தெடுக்கும் விஷயத்தில் உங்கள் நிர்வாக சபையினருக்குத் தோன்றிய காரணங்கள் என்னவோ? அறியேன். இந்த மஹாசபையில் தலைமை வகித்தற்குரிய தகுதி வாய்ந்திலா, அன்றிப் பொது ஜன வாழ்வில் அநுபோகத்திலா எதிலுமே எனக்கில்லையே. உங்களுடைய அபிவிர்த்தி நோக்கத்தில் அநுதாபமுடைமையே முக்கியமான காரணமாகக் கருதியிருப்பின், அது என் விஷயத்தில் பொருந்தினும் பொருந்தும் என்று உறுதி கூறுவேன். உங்கள் எல்லோருடைய ஒத்துழைப்பைத் துணையாகக்கொண்டு இந்த மஹாசபையின் நடவடிக்கைகளைத் திருப்திகரமாகச் சமாப்தி செய்ய என்னால் இயலும் என நினைக்கின்றேன்.

### வகுப்புணர்ச்சியும், தேசியவுணர்ச்சியும்.

சாதிப்பிரிவினையினால் உண்டாகும் அபாயங்களைக் குறித்து எச்சரிக்கை செய்வதும், தேசிய நோக்கத்தை முன்னிட்டு வகுப்பு வித்தியாசத்தைப் பாராட்டாமலிருத்தல் வேண்டும் என்று சொல்வதும் இத்தகைய மஹாசபைகளில் இக்காலத்தில் ஒரு வழக்கமாகப் போய்விட்டதென்னலாம். இதைப் பன்னிப் பன்னியுரைப்பவர்கள் இதன் உண்மைத் தத்துவத்தை அறிந்துள்ளார்களோ? அன்றித் தற்கால நம் நாட்டின் ஒழுங்குக்கு ஒத்துள்ளதென்று கருதுகின்றார்களோ? நான் அறியேன். "கம்யூனிட்டி" என்னும் இந்த ஆங்கில பதமானது மொத்தமாக ஜன சமூகத்தைக் குறிப்பதேயன்றி நம்மில் பெரும்பாலோர் அர்த்தம் செய்கிறபடி ஜனங்களில் ஒரு வகுப்பினரை மட்டும் குறிப்பதாகாது. இதற்கு நியாயங்கூற மிகவும் சிரமப்பட வேண்டியதில்லை. நமது சமுதாய ஒழுங்கு முழுவதும், இந்திய பொதுஜன வாழ்க்கை முறையும் எல்லாம் தந்திரங்களையும் நியாயமில்லாத வித்தியாசங்களையுமே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. இந்த சமூக உணர்ச்சியானது நம்முடைய தினசரி வாழ்க்கையில் உள்ளூற ஊறியிருக்கிறது. இந்தக் கொள்கையில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேசிய மென்னும் பரந்தவுணர்ச்சி ஏற்படுவது கஷ்டம்; தேசியம் வகுப்புணர்ச்சிக்கு முற்றிலும் வேறானது என்று உணர்வதும் இயலாததாகும்.

### சமூக வாழ்க்கை நிலையின் பயனே வகுப்புணர்ச்சியாம்.

தேசியத்தை வளர்க்குங் கருத்துடையவர்கள் இந்த உண்மைத் தத்துவத்தை அறியவில்லையோ, அன்றித் தமது கருத்தை வெளியிட்டுக்கூறி திருத்தநெறியை அவலம்பிக்கத் தைரியமில்லையோ என்னவோ? நமது தேசிய நோக்க வளர்ச்சியானது வெகு நிதானமாகத்தானிருந்து வருகிறது. இதில் ஒரு ஆச்சரியமுமில்லை. கல்வியபிவிர்த்தியாக வாக இந்தத் தடைகள் ஒழிந்து தொலைந்து போம்; தேசிய ஒற்றுமைக்கு வழியேற்பட்டுவிடும் என்று மிக்க ஆவலோடு எதிர்பார்த்திருந்தோம். நமது நித்திய வாழ்க்கையில் நாம் காண்பவை உண்மையாயின் நாம் கொண்டிருந்த ஆசை அவலமாயிற்று என்றுதான் கொள்ளவேண்டும். இதுவரை மறைவாக இருந்த வகுப்புணர்ச்சியானது கற்றவர்களிடத்திலே தான் மிக்க ஆவேசத்தோடு வெளிப்படுகின்றது. காங்கிரஸ் மஹாசபை ஏற்பட்டு இன்றைக்கு நாற்பத்திரண்டாண்டுகளாகின்றன. அந்த சபையே நம்முடைய தேசிய ஸ்தாபனங்களில் அதியுன்னதமானது. இதற்குச் சந்தேகமேயில்லை. அப்படியிருந்தும் வகுப்புணர்ச்சியானது இப்படித் தலைவிரி கோலமாய்க் கூத்தாடுவதைக்காணுங்கால் நமக்கு வருத்தமாகத்தானிருக்கிறது. இந்த விஷயத்தை எங்ஙனம் சிக்கறுப்பது என்பதைக் குறித்து ஜனத்தலைவர்கள் இராப்பகலாய்க் கவலை கொண்டுழைக்கின்றனர். சமீபத்தில் நடைபெற்ற மதுரை முனிசிப்பல் தேர்தலை இங்கே குறிப்பிட்டுக் காட்டுவது பொருந்தும் என நினைக்கிறேன். இந்த விஷயம் வெறுங்கதையாய் முடியாமல், ஒரு நல்ல படிப்பினையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றதென்னலாம். அந்தத் தேர்தலில் ஒரு பிரிவில் வசிக்கும் படித்த வாக்காளர்களே காங்கிரஸ் அபேக்ஷகரை ஒதுக்கிவிட்டு, வகுப்புவாரியில் ஈடுபடும் ஒருவரைத் தெரிந்தெடுத்தனர். இது வகுப்புவாரி உணர்ச்சிக்கோர் வெற்றி என்று நான் கூறமாட்டேன். நமது பொது ஜன வாழ்க்கை பலமாக ஊறியிருக்கும் ஒரு இயற்கைச் சக்தியின் பரிணாமம் என்றே நான் சொல்லுவேன். இதிலிருந்து நாம் ஒன்று சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். தேசியக் கொள்கைகள் செழுமையுற்று வளராதபடி கெடுக்கும் நச்சுப்பூண்டுகளை பற்றற ஒழிக்கவேண்டும் என்பது தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டுவது.

### தேசீய அபிவிர்த்திக்கு ஜாதிப்பெருந்தடை.

தேசியத்தின் வளர்ச்சிக்கு நச்சுப்பூண்டாக இருப்பது யாது? "ஜாதி" என்கிறோமே அது தான் அப்பூண்டு. ஜாதி வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு நிற்கும் சமூக ஒழுங்கை அடியோடு களைதல் வேண்டும். அப்படிக் களைந்தாலொழிய நமது தேசிய நோக்க நிறைவேற்றமானது பரிபூர்த்தியடையவே அடையாது. அரைகுறையாகத் தானிருந்து வரும். இப்படி ஒரேயடியாய்ப் பேதவுணர்ச்சியைக் கிளப்புகின்ற இந்த விஷயத்தை, இந்த இடத்தில், இப்படி உறைத்துச் சொல்லுகிறேன் ஒருவித மனத்துணிச்சலோடுதான் சொல்லுகிறேன். இந்தக் கும்பகோணமானது இந்த சமயத்தில் வைராக்கிய சித்தத்தை உடையவர்களுக்கு ஓர் அரண் என்று நான் நன்கறிவேன். மஹாத்மா காந்தியடிகளையும் குற்றங்கூறி, காங்கிரஸ் மஹாசபைக்கும் எச்சரிக்கை செய்யவல்ல பண்டித பரிஷத்துக்கு இக்கும்பகோணம் உறைவிடம் என்பதும் எனக்குத் தெரியும். அந்தப் பண்டிதர்கள் ஒருபுறமாக; தேசிய ஒற்றுமைக்குப் பெருந்தடையாய் இருப்பது சாதி வேற்றுமையில் பற்றுள்ளம் தான் என்று கூறுவதாலும், நமது சமுதாய வாழ்க்கைக்கு அடிப்படையாயிருக்கும்படியான இந்தப் புராதனக்கட்டுமானத்தை மூலதோஹனி செய்தால் ஒழிய, தேசியத்தை வளர்ப்பது இயலாததாகும் என்று சொல்லுவதாலும் இங்குள்ளவர்களிலும் சில பேருடைய மனதை நான் புண்படுத்தினும் படுத்துபவனாவேன். ஜாதிப்பிரிவினை உணர்ச்சி வலுத்து நிற்கும் தனையும் தேசியத்துக்கு விரோதப் பான்மையுடைய வகுப்புவாரி உணர்ச்சி கூத்தாடிக்கொண்டு தானிருக்கும்.

ஜாதிப்பிரிவினைக்குக் காரணமாயிருந்த சமூகத்தின் சமூக நிலையையும், செல்வ நிலையையும் ஆராய்வது என்ன பலன் தரப்போகின்றது? இது விஷயமாக குறிப்பிட்ட ஒரு வகுப்பினரைக் குற்றம் கூறுவதானும் பயன்படாது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. நமது சுவாநுபவத்தில் இருப்பதைவிட முற்றிலும் வேறான நிலைமைக்குச் சாதகமாக இருந்திருக்குமோ என்னமோ? நாளது தேதியில் ஜாதியானது நவீன தேசியத்துக்கு முற்றிலும் ஒவ்வாததாக இருக்கின்றது. அன்றியும் தேசிய வாழ்வைப் பிரித்து வைக்கவும் செய்கின்றது. இந்த முறைக்கு யார் மூல காரணமாயிருந்த போதிலும், தற்காலம் நம்மில் ஒவ்வொருவரும் அந்த முறைக்கு அடிமைப்பட்டிருப்பதுமல்லாமல், அந்த முறையை ஆதரித்தவர்களாயுமிருக்கிறோம். நாளது தேதியில் இப்பெருந்தீமை நம் நாட்டில் உலாவிவருவதற்கு நாமனைவோருமே ஜவாப்தாரிகளாகின்றோம்.

### ஒடுக்கப்பட்டோரும் சுயமரியாதையும்.

நமது ஜனசமூகத்துக்குள்ளே தாழ்ந்த வகுப்பினருக்குச் சுயமரியாதையுணர்ச்சி ஏற்பட்டதும் ஜாதியேற்பாட்டோடு போர் நிகழலாயிற்று. தாழ்ந்த வகுப்பினர் என்று சொல்லப்படுபவர்களுக்குள்ளே சுயமரியாதையைக் குறித்து எழுந்த இக்கிளர்ச்சியே இந்திய தேசியம் செழித்தோங்குதற்குரிய ஓர் நல்ல அறிகுறி என்னலாம். இந்தக் கிளர்ச்சியை கிளப்பினவர்கள், கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் இந்த ஜாதிக்கட்டை எதிர்த்து வருவார்களேயானால் இக் கிளர்ச்சி நியாயமானது, பயன்தருவது என்று சொல்ல இடம் தரும். "இதுவரையும் கிளர்ச்சி செய்தார்களே, அதற்குத் தக்க பலன் கிடைத்திருக்க வேண்டுமே, எங்கே?" என்றால் அதற்குக் காரணம் தம்மினும் மேலோர் என்று கருதுபவரோடு சமவுரிமை பாராட்டவும் அம்மேலோர் தம்மினும் கீழோர் என்று கருதுபவருடைய உரிமையை மதியாமையே தான் என்று கூறலாம். ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பைத் தன்னினும் அந்தஸ்தில் தாழ்ந்தது என்று எண்ணுமானால் அவ்வகுப்பு சமூக அந்தஸ்தில் சமவுரிமையடைய நியாயமாக பாத்தியமுண்டாகுமா? என் கருத்தை விளக்க உங்கள் வகுப்பினரையே உதாரணமாக எடுத்துக்காட்டுகிறேன். தாங்கள் தயவுசெய்து என்னை மன்னிப்பீர்களாக. சில வகுப்பினர் நாடார் வகுப்பினர்க்குச் சமவுரிமை வழங்குவதை மறுக்கின்றனர். நாடார்களுக்கு இது மனதுக்குப் பிடிக்கவில்லை. அதுவும் நியாயமே. ஆதலால் தங்களுக்கு சமவுரிமைக்குத் தகுதியுண்டு. என்று அடிக்கடி கூறிவந்திருக்கின்றனர். இப்படிப் போராடுவதிலே தங்களை பிறப்பால் க்ஷத்திரியர்கள் என்று கூறி சமவுரிமைப் பாத்தியம் தங்களுக்குண்டென்று காட்டி வருகின்றார்கள். இவ்வாறு சொல்லிச் சமவுரிமையை நிலைநாட்டுவது வருந்தத்தக்கதாக இருக்கின்றது. எப்போது உங்களை "க்ஷத்திரியர்கள் நாங்கள்" என்று கூறத் தலைப்படுகின்றீர்களோ, அப்போதே நீங்கள் ஜாதியேற்பாட்டுக்குப் பெருமதிப்புக் கொடுத்துவிடுகின்றீர்கள். உங்களிலும் தாழ்ந்தவர்களாகக் கருதப்படும் வகுப்பினரை நடத்துமுறையை உங்களிஷ்டம்போல் வைத்துக் கொள்ளத் தலைப்படுகின்றவராவீர்கள். இப்படி வைத்துக் கொள்வது உங்களுடைய பாத்தியதை நியாய மார்க்கத்தில் கொண்டாடுவதாக ஆகாது" என்றுதான் நான் சொல்வது. பூர்வீகமான வம்ச சரித்திரத்தை அநுசரித்து நீங்கள் மேல் நிலையை அபேக்ஷித்தற்கு இடமுண்டு என்பதைப் பாராட்டிக்கொண்டு சமவுரிமைப் போர் நிகழ்த்தாமல் 'நாங்களும் மனிதப்பிறப்பினரே; நாங்கள் சமமாக பாவித்தற்குத் தகுதியுடையோம்' என்னும் நியாய வழியானதும் மறுக்க முடியாததுமான காரணத்தையே முன்னிட்டு போர் நிகழ்த்தி வருதல் விரும்பத்தக்கது. உங்களை அடக்கியாளும் இந்தச் சமூக முறையை அடியோடே மறுத்தொழித்து உங்கள் கொள்கையை நிலை நாட்டுவதற்கே முற்படுவீர்களாக! இங்ஙனமே ஒவ்வொரு வகுப்பும் தன் தன் உரிமையை நிலைநாட்ட முற்படுமாயின் சமூக சீர்திருத்தமும், தேசியக்கட்டுமானமும் இப்போதைவிட வெகு விரைவாகவே அபிவிர்த்தியடைந்துவிடுமன்றோ!

### தக்க சிகிச்சை.

சமூகச் சீர்திருத்தத்தில் முனைந்து வேலை செய்கிறவர்கள் அடிக்கடி நமக்கு எச்சரிக்கை செய்து வருவதை நாம் பல தடவைகளிலும் கேட்டிருக்கிறோமல்லவா? சீர்திருத்த வேலையில் அபசாரமும்

(இதன் தொடர்பு 6-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

சேதமின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்ரூ வெளியை மனமிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு புரட்டாசி மீ ௰௭ உ

---

## கும்பகோணம் மகாநாடு.

௬

முறையே நாம் எழுதிக் கொண்டுவரும் இம் மகாநாடானது கடவுள் கிருபையாலும், நாடார் குலாபிமானிகளின் அதி தீவிர முயற்சியினாலும் யாதொரு விக்கினமுமின்றி இனிது நிறைவேறியதுபற்றிப் பெருமகிழ்வடைகின்றோம்.

மகாநாட்டின் கௌரவ அக்கிராசனர், உபசரணைக் கமிட்டித் தலைவர், சங்கத் தலைவர் ஆகிய மூத்திரத்தினர் சொற்பொழிவுகளையும் நடவடிக்கைகளையும் முறையே தொடர்ந்து பிரசுரம் செய்திருக்கிறோம். மூன்று பேர்களுடைய சொற்பொழிவுகளையும் நாடார் குல மக்கள் ஆழ்ந்துகவனிக்கத்தக்கதே. அதனதன் சாராம்சங்களை விளக்கி நம்முடைய அபிப்பிராயத்தை அடுத்து விரிவாக எழுதுவோம்.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் தொனிக்கும் க்ஷத்திரிய சப்தத்தைப் பற்றி "தமிழ் நாடு"ம், "திராவிட" னும் விரிவாக வியாக்யானம் பண்ணி ஸ்ரீமான் செட்டியாரவர்கள் பேச்சை வெகுவாய் ஆதரித்தெழுதியிருக்கின்றன. அதில் "தமிழ்நாடு" வியாக்யானம் பண்ணியிருப்பதில் சிறிது தவறு காண்கிறது. வர்ணாச்சிரம தர்மத்தைப்பற்றியும், தீண்டாமையைப்பற்றியும்எழுதப்பட்டிருக்கும் பிரச்சினையானது முற்றுந் தவறானது. அதைப் பற்றியும் பிறகு எழுதுவோம்.

இதற்கு முன் கூடின பல நாடார் மகாநாடுகளைப்போல் பெரும் ஆர்ப்பாட்டங்களுடன் காணப்படாமல் மக்கள் மனதைக் கவரத்தக்க முறையில் அடக்கமும், அமைதியும் குடிகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. மகாநாட்டை சிறப்புடன் நடத்த உபசரணைக் கமிட்டியார் எடுத்துக் கொண்ட முயற்சி மிகவும் போற்றத்தக்கது. நாடார் ஜனத் தொகையில் மிகக் குறைந்த ஜனத் தொகையுள்ள கும்பகோணம் நாடார்கள் இப் பெரு மகாநாட்டை வெகு திறமையுடன் நடத்தி வைத்ததை மிகவும் பாராட்டுகின்றோம். இம் மகாநாட்டுப் பந்தலிலேயே இளைஞர் மகாநாடொன்று கூடியிருப்பதும் ஒரு விசேஷமாகும். முதல் முதலாக நாடார் மகாஜன மகாநாடு கூடின தஞ்சை ஜில்லாவின் கண்ணே நாடார் இளைஞர் முதலாவது மகாநாடு கூடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இளைஞர் களுள்ளத்தில் எழுந்த சுயமரியாதை வெள்ளம், பண்டிதர்கள் வர்ணாச்சிரமக் காவேரிக் கரையை உடைத்து நாடார் மகாஜன மகாநாட்டுக்குள்ளும் புகுந்துவிட்டது.

இம்முறை செய்திருக்கும் பல அரிய பெரிய தீர்மானங்களை ஆழ்ந்து பார்த்தால் இதையொரு வகுப்பு மகாநாடென்று யாரும் சுலபமாய்ச் சொல்லிவிட முடியாது. தேசியக் கருத்துக்கு நாடார்கள் எவ்வளவு இணங்கி வந்திருக்கிறார்களென்பது இதனால் நன்கு விளங்குகிறது. பல தீர்மானங்களிற் தேசிய மணங் கமழ்கின்றது. அத்தீர்மானங்கள் நாடார் சமூகத்தில் வெகு நாட்களாக ஊறிப்போய்க் கிடக்கும் பிடிப்பை விட்டு வெகு விரைவில் அனுட்டானத்திற்கு வந்து கொள்ள முடியாதென்றாலும், ஞாயமாய் விலக்க வேண்டியதையும், அவசியம் தள்ள வேண்டியதையும் இலை நிறுத்தப் பிரியப்படமாட்டார்கள். காலச் சக்கரம் இதர சமூகத்தை எவ்வளவு தூரந் தள்ளிக்கொண்டு போக முடியுமோ அவ்வளவு தூரம் தான் நாடார்களையும் தள்ளமுடியும். ஆயினும் மற்றவர்களுக்கு முன் பந்தியில் நிற்க நாடார்கள் பிரயாசைப்பட வேண்டும். ஒவ்வொரு தீர்மானத்தின் உண்மை தத்துவங்களைப்பற்றி விளக்கமாகச் சமயம் நேரும்போது எழுதுவோம்.

சிவகாசியில் நடந்த எட்டாவது மகாநாட்டில் தொடை நடுங்கித் தள்ளப்பட்ட தொண்டர் படைக் கொள்கையை இப்பதினொன்றாவது மகாநாடு தைரியமாய் வாழ்த்தி வரவேற்றிருக்கிறது. இதனாலும் நாடார் சமூகம் காலமாறுதலுங்கேற்றவாறு எவ்வித தயக்கமுமின்றி கொள்கைகளை மாற்றிக் கொள்கின்றதென்பதையும் சீர்திருத்தக்காரர்களுக்கும், தேசாபிமானிகளுக்கும் இவைகள் எவ்வளவு பயன்தரத்தக்கதாயிருக்குமென்பதையும் தேச மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்த பன்னிரண்டாவது மகாநாட்டை அருப்புக்கோட்டையில் நடத்த ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடாரவர்களால் அழைக்கப்பெற்றிருக்கிறது. வழக்கம்போல் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் மகாநாடு கூட்ட முயற்சி செய்யும்படி அருப்புக்கோட்டை நாடார் ஜன சமூகத்தை வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவன் இனிது நடைபெறக் கிருபை செய்வாராக.

---

# கும்பகோணம் மகாநாடு.

## பிரமுகர்களின் விஜயமும் பிரபல வரவேற்பும்

### ராயல் கமிஷனிடம் நாடார் சமூக உரிமை

பற்றி அறிக்கை வெளியிட கமிட்டி நியமனம்.

### ஆலய பூஜிப்பும், சிரார்த்தம் திருமணச் சடங்குகளும் சுய ஜாதி குருக்களைக்கொண்டு நடத்தல் வேண்டும்.

### தேசிய மணங் கமழும் கதரையே அணிய வேண்டும்.

(நமது நிருபரிடமிருந்து)

கும்பகோணம் செப்டம்பர் 30உ:—

11-வது மகாநாட்டுக்கான கொட்டகை, ஜாகை, சாப்பாடு, வரவேற்பு முதலிய சகல ஏற்பாடுகளும் சரிவர நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. ஏராளமான பிரதிநிதிகள் தங்குவதற்கு தக்க வசதிகள் அமைத்து ஜாகைகள் ஜில்லாவாரியாகப் பிரிக்கப்பட்டு ஆங்காங்கு வசதிகள் செய்ய பிரபல பிரயத்தனங்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. வெளியூர் பிரதிநிதிகள் 300 பேர்கள் வரை வந்திருக்கின்றனர். நாளை காலை வண்டிக்கு ஏராளமான பிரதிநிதிகளின் வரவு எதிர் பார்க்கப் படுகிறது. இன்றிரவே சங்கம் தலைவர்களும் காரியதரிசிகளும் மற்றும் பிரமுகர்களும் வந்து சேர்ந்தனர். அன்னவர்களை வரவேற்புக் கமிட்டியார்கள் கோலாகலமாய் விமரிசையுடன் வரவேற்று அவரவர்களுக் கேற்படுத்தப் பட்டிருக்கும் ஜாகைக்கு அழைத்துச் சென்றனர். கௌரவ அக்கிராசனர் நாளை காலை வருவாரெனத் தெரிகிறது. முக்கியமாய் கும்பகோணம் நகரெங்கணும் வெகு தேஜோமயமாய் சிங்காரிக்கப்பட்டிருக்கும் காக்ஷி மனதைக்கவரத்தக்கதாயிருக்கிறது. மகா தோரணங்களும் சுப அறிகுறிக்கான வாழை செடிகொடிகளும் பெரிய ரோடுகளில் நாட்டப் பெற்றிருக்கின்றன. இன்றொரு திருநாளாகக் காணப்படுவதே போன்று நகரத்து ஜனங்களும் சந்தோஷமாகவே வைபவங்களைக் கண்டு களிகூர்ந்து இனி நடைபெறும் நடபடிக்கைகளையும் காண வெகு ஆவலுடன் எதிர் நோக்கியிருக்கின்றனர். முக்கியமான தெருக்களில் கமான்கள் நாட்டப்பட்டு "நாடார் மகாஜன சங்கம் நீடூழிவாழ்க" "நாடார்ஊழியப் பிரசாரசபை நீடூழி வாழ்க" "குலப் பத்திரிகைகளும் குலாபிமானிகளும் நீடூழி வாழ்க" "நாடார் கலாசாலைகள் வாசகசாலைகள் நீடூழிவாழ்க" "நாடார் குல மித்திரன் நீடூழிவாழ்க" "அபிமானிகளுக்கு நல்வரவு" "கௌரவப்பிரசிடெண்டுக்கு நல்வரவு" "சங்கம் உத்தியோகஸ்தர்களுக்குநல்வரவு" என்றும், மற்றும் பல நீதிமொழிகளும் அவைகளில் பொறிக்கப்பட்டிருந்தன.

அக்டோபர் 1உ

இன்று காலை இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸில் கௌரவ அக்கிராசனர் மகா-௱-௱-ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள் இவ்விடம் வந்து சேர்ந்தனர். ஈரோடு ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்களும் இன்று காலை வந்து சேர்ந்து சிறப்பித்தனர். மகாநாட்டுத்தலைவர், சங்கம் தலைவர், உப தலைவர், காரியதரிசிகள் மற்றும் முக்கிய பிரமுகர்களையும் மேளவாத்திய கோஷத்துடன் வெகு குதூகலமாய் ஆயிரக்கணக்கான ஜனங்களிடையே ஊர்வலமாக அழைத்து வந்தனர். வாலண்டியர்கள் அணிவகுத்து அமைதி நிலவச்செய்து நடத்திச்சென்றது குறிப்பிடத்தக்கது. நகரெங்கும் மகாநாட்டின் பேச்சே வெகு குதூகலமாயும் சந்தோஷமாயும் பேசப்பட்டது. நாடார் குல இளைஞர்களின் ஒத்துழைப்பும் முயற்சியும் போற்றற்குரியது.

### முதல் நாள் நடவடிக்கைகள்.

கும்பகோணம், அக்டோபர் 1— நாடார் மஹாஜன 11-வது மகாநாடு இன்று மாலை 3-மணிக்கு கும்பகோணம் அரண்மனைத் தோட்டம் நாடகக் கொட்டகையில் கூடியது. ஸ்ரீ. ஆர். கே. ஷண்முகஞ்செட்டியார் எம். எல். ஏ. தலைமை வகித்தார். மகாநாட்டுப் பந்தல் வெகு அழகாக தோரணங்களாலும், கொடிகளாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீமான்கள் வி. வி. ஷண்முகநாடார் (விருதுநகர்), ஈ வே. ராமசாமிநாயக்கர், ஐ. குமாரசாமிபிள்ளை (தஞ்சாவூர் ஜில்லா கல்விச்சங்கத் தலைவர்) ஏ. டி. பன்னீர்செல்வம் (தஞ்சாவூர் ஜில்லா போர்டு தலைவர்), ஆர். வி. வெங்கிட்டராம நாயுடு, ஆர். கந்தசாமிமூப்பனார் (தஞ்சாவூர் ஜில்லாபோர்டு தலைவர், முனிசிபல் கௌன்ஸிலர்) என். ஆர். சாமியப்பமுதலியார் (தஞ்சாவூர் ஜில்லா போர்டு உப தலைவர்), உமாமஹேஸ்வரம் பிள்ளை (தஞ்சாவூர் தாலூகா போர்டு தலைவர்), முத்துக்குமாரசெட்டியார் (முனிஸிபல் சேர்மன்) "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் எஸ். ஏ. முத்துநாடார், சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார், எம். எல். ஸி., அ. க. சொ. க. பழனியப்பநாடார், சுப்பையா நாடார், பே. சி. சிதம்பர நாடார, பெ. ப. பாண்டியநாடார், க. க. வி. ஆறுமுகநாடார், கருப்பண்ணசாமிநாடார், கடலை முத்துநாடார், கனியப்ப நாடார், பழனியப்ப நாடார், மூத்துக்குமாரநாடார், ப. உ. ஆ. சிதம்பரநாடார், மதுரை புன்னையப்பநாடார், ஜில்லா முனிசீப் தேவிஸ்நாடார், சென்னை டி. பி. மாரியப்பநாடார், நாகை எல். கே. ராமஸ்வாமிநாடார் முதலிய பலர் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீ. சொ. ஆ. சொக்கலிங்கபாண்டியரவர்கள் கடவுள் வாழ்த்துப் பாடினார். பின்னர் ஒரு சாரணர் தலைவர் வாழ்த்துப்பாடினார். உபசரணைக் கமிட்டித் தலைவர் தனது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்தார். பின்னர், நாடார் மகாஜன சங்கம் 11-வது மஹாநாட்டில் ஸ்ரீ. ஆர். கே. ஷண்முகஞ்செட்டியார் தலைமை வகிக்க வேணுமாய் நாடார் மஹாஜன சங்கத்தலைவர் ஸ்ரீ. வெ. கனகசபைநாடார் பிரரேபித்துப் பேசினார். சங்க உப தலைவரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீ. டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியநாடார் மேற்படி பிரரேபணையை ஆமோதித்துப் பேசினார். ஸ்ரீமான்கள் விருதுநகர் வெ. வ. ஷண்முகநாடார், கும்பகோணம் முனிஸிபல் கௌன்ஸிலர் ஆ. வெ. ம. கருப்பண்ணசாமிநாடார், கு. ஆ. முத்துநாடார் இவர்கள் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார்கள். தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறி, பெருத்த சந்தோஷத்தினிடையே தலைவர் மாலையிடப்பட்டு தலைமை வகித்து தனது அக்கிராசனப் பிரசங்கத்தைப் படித்தார்.

### தேவஸ்தான கமிட்டி.

திருவாரூர் ஸ்ரீ. வெ. சாமிநாதநாடார் பின்வரும் தீர்மானத்தைப் பிரரேபித்துப் பேசினார்:—

"சமீபத்தில் தேவஸ்தானங்களுக்கு கமிட்டி நியமனம் செய்ததில், நம் வகுப்பினர்களை நியமனம் செய்யாத

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# மகாஜன சங்கத் தலைவர்

## பொறையாறு ஸ்ரீமான்

# வெ. கனகசபை நாடாரவர்கள்

# நிகழ்த்துரை.

கும்பகோணம் அக்டோபர் 2உ

சகோதரர்களே!

நமது நாடார் மஹாஜன சங்கத்திற்கு என்னை நீங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்த பெருமையை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். அதற்காக என் மனப்பூர்வமான வந்தனத்தை அளிக்கின்றேன். என் அறிவு, அனுபோகம், வயது முதலியவற்றைக் குறித்து இப்பெருமை எனக்கு அளிக்கப்படவில்லையென்பதையும், என் குடும்பத்தைக் கவுரவப்படுத்த உத்தேசித்த மட்டும் இப்பதவி எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தென்பதையும் நான் நன்கு உணர்வேன். நீங்கள் இப்போது என்மேல் சுமத்தியிருக்கும் பொறுப்பு மிகுந்த பதவியை வகிக்கத் தக்க சக்தி எனக்கு இல்லாதிருப்பதை யானறிந்தும் இச்சமயம் மேற்கும் நமது வகுப்பிற்கும் சம்பந்தமான சில வார்த்தைகளை உங்கள் அநுமதியின் பேரில் நான் பேச விரும்புகிறேன்.

இக்கூட்டத்திற்கு நமது வகுப்பினர்கள் பல இடங்களிலிருந்தும் ஏராளமாய் வந்து கூடியிருப்பதைக் கண்டு நான் ஆனந்தம் அடைகிறேன். ஏனெனில் உங்கள் மூலமாக இக்கூட்டத்தின் தீர்மானங்களும் முடிவுகளும் நமது வகுப்பினருக்குப் பரவும். இன்னும் உங்களில் அநேகருக்குத் தத்தம் இடங்களில் இருக்கும் குறைவுகளும் வேண்டிய சீர்திருத்தங்களும் செவ்வையாய்த் தெரியுமாதலின் நீங்கள் இக்கூட்டத்தில் நடக்க வேண்டிய வேலைக்குத் தக்க உதவி புரியக்கூடும். நம் தற்கால நிலையை அறிந்து மென்மேலும் நாம் முன்னேற்றமடைவதற்கான உபாயங்களை யோசித்து ஆராயும் பொருட்டு நாம் இங்கு கூடியிருக்கிறோம். இந்நோக்கம் முற்றிலும் பூர்த்தியடையவேண்டுமாயின் முந்திய கூட்டத்தில் கூறியபடி நாம் பல இடங்களிலும் கிளைச் சங்கங்கள் ஸ்தாபித்து அவைகளை நமது வாலியர்களைக் கொண்டு ஒழுங்குபடுத்தி நடத்துமாறு ஏற்பாடு செய்தல் வேண்டும். இவ்வாறு கிளைச்சங்கங்கள் பரவுவதில் தாய்ச் சங்கத்தின் அலுவல்கள் பங்கிடப்பட்டுப் போவதன்றி, எளிதாய் நடைபெறும். மேலும் வருடந்தோறும் கூட்டம் கூட்டுவது சுலபமாகும். இவ்வித நோக்கங்கொண்டு தான் நம் நாட்டில் எங்கும் காங்கிரஸ் மகாசபைகளும், பிராமணரல்லாதார் இளைஞர் சங்கங்களும், வாலிபக் கிறிஸ்தவர் சங்கங்களும், பிரம்மஞான சபைக் கிளைகளும் அமைக்கப்பட்டுள்ளன. தவிரவும் நமது மஹாஜனக் கூட்டம் கூடும்பொழுது ஒரு பொருட்காட்சியும் அத்துடன் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று முந்திய கூட்டத்தில் கூறப்பட்டுள்ளதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். இதன் அவசியத்தைக் கருதியே நானும் அதை இங்கு எடுத்துரைக்கின்றேன். தற்காலத்தில் அநேகமாய் இவ்விதக் கூட்டங்கள் கூடுந்தோறும் ஒரு பொருட்காட்சியும் ஏற்பாடு செய்கிறார்கள். இவ்விதப் பொருட்காட்சிகள் தேசியக் காங்கிரஸ் கூடும்போது நடத்துகிறார்கள். நமது ராஜதானியில் அநேக தாலுகா போர்டாரும், முனிசிபாலிட்டியாரும், விவசாய கைத்தொழில் இலாகாவினரும் அடிக்கடி பொருட்காட்சி ஏற்பாடு செய்வதை நாம் அறிவோம். இவைகளுக்குப் பல இடங்களினின்று நேர்த்தியானதும், திறமையை விளக்குவதுமான பல பொருள்கள் வந்து சேருவதால் இவைகளால் நமக்கு உபயோகமான பல விஷயங்கள் புலப்படுவதன்றி மனதிற்கும் சந்தோஷம் அதிகரிக்கின்றது.

இனி நான் கூற உத்தேசிக்கும் விஷயங்களில் முதலாவதாகக் கல்வியைப்பற்றிக் கூறுகிறேன்.

### கல்வி நிலையும், செய்ய வேண்டிய மாறுபாடுகளும்.

தற்காலத்தில் அனுஷ்டானத்திலிருந்து வரும் கல்வி முறைகளைப் பற்றியும், அவைகளின் குறைகளையும், ஏற்பட வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துக்கூற எனக்குப் போதுமான அவகாசமில்லை. ஆகிலும் நம் சம்பந்தமான சில விஷயங்களை மட்டும் எடுத்துக் கூறுகின்றேன். நமது மாணவர்கள் பயின்று வரும் கல்வி முறைகளில் சிற்சில மாறுபாடுகள் மிகவும் தேவை. அவர்கள் கற்கும் கல்வி பிற்காலத்தில் அவர்களுக்கு வாழ்நாளில பயனளிப்பதாயும், அனுஷ்டானத்திலிருப்பதாயுமிருத்தல் வேண்டும். இந்நோக்கங்கள் பெரும்பாலும் நமது கல்விச் சாலைகளில் பயிற்றுவிக்கும் "பொதுக் கலவி" யால் நிறைவேறுவதில்லையென்பதை அறிந்தே அடிக்கடி பத்திரிகைகளின் வாயிலாகவும், கட்டுரைகளின் மூலமாகவும் நம்நாட்டில் அநேகர் இதை இடித்துக் கூறியுள்ளனர். எவ்வித மாறுபாடுகள் ஏற்பட்டால் நமது கல்விச்சாலைகளால் நம் மாணவர்களுக்குத் தற்காலத்திற்கு வேண்டிய விஷயங்கள் பயிற்றுவிக்கப்படலாமென நாம் கவனிப்போம்.

பொதுவாகப் பொதுக்கல்விக்குச் செலுத்தப்படும் கவனத்தைச் சற்றுக் குறைத்து அதைத் தொழிற் கல்விக்குச் செலுத்தவேண்டும். நமது கலாசாலைகளில் கீழ்த்தர வகுப்புகளில் தொழிற்கல்வி சம்பந்தமாக ஆரம்பப் பயிற்சி அளிக்கப்பட்டு, மேல்த்தர வகுப்புகளில் இன்னும் சற்று முதிர்ந்த பயிற்சி அளிக்கப்படலாம். இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நம் மத்தியதரக் கலாசாலைகளிலும் ஆரம்பக் கலாசாலைகளிலும் தொழிற்பயிற்சி வகுப்புகள் சேர்க்கப்பட வேண்டுமென்று நினைக்கிறேன். இப்பரீட்சையை நாம வைத்து நடத்தும் 3 மத்தியதரக் கல்லூரிகளில் ஏற்படுத்திப் பார்க்கலாமென்று தோன்றுகிறது.

இது தவிர விவசாயக் கல்வி, வியாபாரக் கல்வி, தொழிற்கல்வி முதலியவைகளிற் பயிற்சி அளிப்பதற்கென்றே தனிக்கல்விச்சாலைகள் நமது ஜனங்கள் வசிக்குமிடமெங்கும் பரவவேண்டுமென்பது என் நோக்கம். இதில் பயிலும் நமது மாணவர்கள் தம் வாழ்நாளில் தேர்ந்த தொழிலாளர்களாகவும், வியாபாரிகளாகவும், விவசாயிகளாகவும் அமரவேண்டுவது பொருட்டு இக்கல்விச்சாலைகள் ஏற்பட வேண்டுவது அவசியம். சர்க்காரால் சிற்சில இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இன்ஜினியரிங் கல்லூரி, கலாசாலைகளும் விவசாயக் கல்லூரியும், தொழிற் கல்விச்சாலைகளும் உள்ளன. ஆனால் அவைகளிற் பயின்று தேர்ச்சி பெறுவதற்குச் சேர்க்கப்படும் மாணவர்கள் படிப்பிலும் உன்னதர்களாயிருத்தல் வேண்டும். அன்றியும் இவைகளிற் கல்விகற்பவர்களுக்கு ஏற்படும் பொருட்செலவும் அதிகம். ஆகவே இதுபோன்ற பல சிறிய பள்ளிக்கூடங்கள் நாமே எங்கும் ஏற்படுத்தவேண்டியது முக்கியம். சுதேச ராஜ்யங்களில் முதன்மையான பரோடா இராஜ்யத்தில் விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் வேண்டிய கல்வி பயிற்றுவிக்கும் அநேக கலாசாலைகள் எங்கெங்கும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இவ்விதத் தொழிற் கல்வி நம் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று நான் கூறுவதினின்றும் பொதுக்கல்வியே வேண்டுவதில்லையென்று நான் அபிப்பிராயப் படுவதாகக் கொள்ளலாகாது. ஒரு தொழிலுக்கு வேண்டிய கல்வி பயிலுபவர்களுக்குச் சரி, மேலே படிப்பவர்களுக்கும் சரி; ஆரம்ப மூலாதாரக் கல்வி மிகவும் அவசியம். ஆரம்பக் கல்விகற்று, எண்ண எழுதப் படிக்கத் தெரியாத ஒருவனும் தேர்ந்த தொழிலாளியாவது முடியாது. எவ்வளவுக் கெவ்வளவு தேர்ச்சியும், வன்மையும் ஏற்படவேண்டுமோ அவ்வளவுக் கவ்வளவு பொதுக்கல்வியும் திடமாயிருத்தல் வேண்டும்.

போன கூட்டத்தில் நமது உயர்தரக் கல்விச்சாலைகளை நாம் அதிகப்படுத்த வேண்டுமென்றும், இவைகளை ஒட்டி மேலேவரும் பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு கல்லூரி ஒன்று நாம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஆயினும் நான் மாறாக அபிப்பிராயம் கொள்ளுகிறேன். இதற்கு மிகுதியான திரவியம் வேண்டும். இத்திரவியத்தைக்கொண்டு சிலர் பொருட்டு நாம் ஒருகல்லூரி ஸ்தாபிப்பதைக்காட்டிலும் நமது முன்னேற்றத்திற்கான தொழிற் கல்விச்சாலைகள் நாம் ஸ்தாபிக்கலாம். ராஜதானியின் பல இடங்களிலும் இருக்கும் கல்லூரிகளில் நமது மாணவர்கள் சேர்ந்து படிக்கலாமல்லவா? அன்றியும் அதிகமான கல்விச்சாலைகளை ஸ்தாபிக்க முயல்வதிலும் இருக்கும் கல்விச்சாலைகளை நாம் முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்து விருத்திசெய்வது மேலாகும். கடைசியாக ஒரு அறிவாளி கூறியுள்ளபடி நாம் நமது கல்வி முறையினால், அதில் பயிலும் மாணவர்களுக்குப் பல ஜீவனோபாயங்கள் ஏற்படும் விதம் அதை அமைக்க வேண்டுமாகையால் மேற்கூறிய ஏற்பாடுகளை நானெடுத்துக்கூறலானேன்.

### தொழிற்பயிற்சி—அதற்கான ஏற்பாடுகள்.

நம் கல்வி முறைகளையும் நாம் அனுஷ்டிக்கவேண்டிய சில மாறுபாடுகளையும் நான் கூறுகையில் நமது பிள்ளைகளுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்று நான் எடுத்துக் காட்டினேன். அது விஷயத்தைப் பற்றி இங்கு சில வார்த்தைகள் கூற நினைக்கிறேன்.

பொதுவாக நம் மனதில் ஒரு எண்ணம் இருந்து வருகின்றது. நம் குடும்பத்தில் யாரை நாம் ஒன்றுக்கும் உதவாதவர்களென்று நினைக்கின்றோமோ அவர்களையே தொழிற்பயிற்சி பெறுவதற்கு அனுப்பவேண்டுமென்றும், புத்திக்கூர்மையும், சுறுசுறுப்பும், சூட்சுமமுமான பிள்ளைகளை "மேற்படிப்"பிற்கு அனுப்பவேண்டுமென்றும் நம்மில் அனேகர் எண்ணுகிறோம். இதை நாம் மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்பயிற்சி பெற்று அதி தீவிரமான புதிய யுக்திகளிற் சிறந்த சாமர்த்தியம் அடையும் பிள்ளைகள் நமது புத்திசாலிப் பிள்ளைகளேயாகையால் அவர்களையும் நாம தொழிற் பயிற்சிக்கு அனுப்பவேண்டும்.

இனி இத்தொழிற்பயிற்சி அளிக்கற் பொருட்டு அனேகபள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும் வேலை கற்குமிடங்களும் ஸ்தாபிக்கப்படல் முக்கியமாதலின் இவைகளுக்கு வேண்டிய திரவியத்தைச் சேகரிப்பது நம் கடமையாகும். அரசாங்கத்தாரை நாம் கேட்போமாகில் தங்களாலியன்றதை உதவி புரிவார்களெனினும் அத்தகைய உதவி மிகவும் சொற்பமாகவே இருக்குமாதலின் அதனை முற்றிலும் நம்பியிருத்தலாகாது. நம்மால் இயன்ற அளவு முயற்சிகள் செய்து நாம் நிதி சேர்த்து இவ்வேற்பாடுகள் முடிவுபெறச் செய்யவேண்டும். இதன் பிறகு வெளிதேசங்களிலேயோ அல்லது நம் தேசத்திலேயோ முக்கிய தொழில்களில் அதிகத் தேர்ச்சிபெறும் பொருட்டுக் கல்வி பயிலச்செல்லும் நமது மாணவர்களுக்குச் சகாயம் புரிதற்காக ஒரு நிதி ஏற்படுத்தவேண்டும். அரசாங்கத்தார் சிற்சில தொழிற் பயிற்சிக்காக வென்று நிதியும் உபகாரச் சம்பளமும் வழங்குகின்றனர். ஆனால் அவைகள் சொற்பமாதலின் நம்மவர்களில் அனேகருக்கு அவை பயன்படாது. வங்காளத்தில் அமைத்திருப்பதுபோல வியாபாரத் தொழிற் கல்விபயில்வோர்க்கு உபகாரம் செய்வதற்கென நாமும் ஒரு சங்கம் ஏற்படுத்தி அதனிடம் பொருள் கொடுத்து ஒரு கமிட்டியும் ஏற்படுத்தி இவ்வுதவியை வழங்கலாம். இவ்வேற்பாடுகள் முற்றுப்பெற்றபின் நம்முடைய மாணவர்களைத் தொழில் பயிற்சி பெறுவதை முன்னிட்டு அன்னியர் நடத்திவரும் தொழிற்சாலைகளுக்கும், ஆலைகளுக்கும் அனுப்பலாம். பம்பாயில் இவ்விதத் தொழிற்கல்வி பெரும்பான்மையான மாணவர்களுக்கு அளிக்கப்படுவதால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் மிகவும் தேர்ந்த தொழிலாளர்களாகி நாட்டின் பொருளாதார நிலையை விருத்திசெய்கின்றனர். நம் மாணவர்களும் இதேமாதிரி பயிற்சி பெற்றபின் நமது நாட்டில் அனேக புதிய கைத்தொழில்களை ஸ்தாபிக்க ஏதுவாயிருக்கும்.

### நமது கைத்தொழில்கள்—தற்கால நிலையும், மாறுபாடுகளும்.

நாம் ஏற்கனவே செய்துவரும் கைத்தொழில்களை விருத்திசெய்வதற்காகவோ அல்லது புதிய கைத்தொழில்கள் ஸ்தாபித்து நடத்துவதற்காகவோ வேண்டிய முயற்சிகள் நாம் அதிகம் செய்திருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆகவே இவ்விஷயங்களைப் பற்றி நான் சற்று விரிவாகக் கூறுகிறேன்.

நம்மில் பெரும்பான்மையோர் தொன்றுதொட்டுப் பனைவெல்லம் காய்ச்சுவதிலும் பனங்கற்கண்டு காய்ச்சுவதிலும் அமர்ந்துள்ளனர். ஆயினும் இதில் நமக்குக் கிடைக்கக்கூடிய அளவு லாபம் கிடைக்கவில்லையென்பதே அனேகர் அபிப்பிராயம். அன்றி இவைகளின் தரமும் விருத்தியடைய வேண்டும். இதற்கான முறைகள் எவையென்று நோக்குவோம்.

அனேக இடங்களில் நாம் காய்ச்சும் பனைவெல்லத்தை அந்நியநாட்டு வியாபாரிகள் முன்னடியே பொருள் கொடுத்து மொத்தமாக ஒப்பந்தம் செய்துகொள்ளுகிறார்களென்று நான் கேள்விப்படுகிறேன். இதனால் விளையுந் தீமைகள் அநேகம் உள்ளன. முன்னடியே பொருள் கொடுக்கும் அந்நியநாட்டு வியாபாரிகள் தங்களுக்கு லாபகரமாகவே ஒப்பந்தம் செய்து கொள்ளுகின்றார்களாதலின் நம் வகுப்பினருக்கு அது நஷ்டமாகவே முடிகின்றது. அந்நியர்கள் பொருளுதவியைத் தடுத்து அதனால் விளையும் நஷ்டத்தைத் தடுக்க உபாயங்களை நான் பின்னால் கூறுகிறேன்.

சிறக, நமது வெல்லத்தின் தரத்தை விருத்திசெய்வதற்கு உபாயங்களை நாம் கவனித்து அதற்கான புதியமுறைகளை அனுஷ்டிக்கவேண்டும். முக்கியமாய் சாற்றைக் காய்ச்சுவதிலும், வெல்லத்தைச் சுத்திசெய்வதிலும் புதிய முறைகள் அவசியம் அனுஷ்டிக்கப்பட வேண்டும். இவைகளில் நம் மாணவர்களையும் பயிற்றுவிக்க வேண்டுவது அவசியம்.

பனைவெல்லம் காய்ச்சுவதோடு நாம் கரும்பாலைகளை ஏற்படுத்திச் சர்க்கரையும் காய்ச்சலாமென்று எனக்குத் தோன்றுகிறது. நம் வகுப்பினர் வசிக்குமிடங்களில் கரும்பு விளைவதில்லையென்றும் அதனால் இக்கைத்தொழில் விருத்தியாகாதென்றும் நீங்கள் அபிப்பிராயப்படலாம். அது சரியல்ல. கரும்பு விளையுமிடங்களுக்கு நாம் சென்று நமது பொருளைக்கொண்டு ஆலைகள் ஸ்தாபித்து இக்கைத்தொழில் விருத்தி செய்யலாம். ஆலைப் பயிற்சியும், சர்க்கரையைக் காய்ச்சுவதிலும் சுத்திசெய்வதிலும் தேவையான பயிற்சியும் நமது இளைஞர்களுக்குக் கொடுத்து நாளடைவில் இக்கைத் தொழிலை விருத்திசெய்யலாமென்று நினைக்கிறேன்.

நாம் வெகு நாட்களாக நடத்திவரும் ஒரே கைத்தொழிலில் நாம் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் இத்துடன் புதிய கைத்தொழில்கள் ஆரம்பித்து விருத்தி செய்வது நலமல்லவா? நாமே இவைகளை ஆரம்பிக்காவிடினும் ஆரம்பம் செய்பவர்களுக்குத் தக்க உதவி புரியலாமல்லவா? இவ்வாறு புதிய கைத்தொழில்கள் ஏற்படின் ஏதாவதொன்றில் நமது வாலிபர்கள் சேர்ந்து தேர்ச்சியடைவார்கள். அன்றியும் நமது பொருளாதார நிலையும் விருத்தியாகும். சென்னையில் நடத்தப்பட்டு வரும் பென்சல், நெருப்புக் குச்சிக் கைத்தொழிலும்,

(இதன் தொடர்பு 4-ம் பக்கம் பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆக்கிரமும் வேண்டாம்; நிதானமாகச் செய்புங்கள்' என்பதுதானே அந்த எச்சரிக்கை. சீர்திருத்தப் பாதையில் இளைப்பாற்றி மண்டபம் கிடையாது என்பது எனது திட்டமான எண்ணம். இந்த வகையில் நாம் சித்தியடைய வேண்டுமாயின் கொஞ்சமும் விட்டுக்கொடுக்காமல் சிகிச்சை முறைகளை அநுசரித்தல் வேண்டும். முஸ்தாபா கமால் பாஷாவானவர்கண்டிப்போடு அடிவேரையே பற்றுவதாகிய முறையைக் கைக்கொண்டதினால் தானே துருக்கியர்கள் முன்னேற்றமடையுமாறு செய்தனர். பயந்து பயந்து செய்யத் தலைப்பட்டால் வருஷம் நூறானாலும் என்ன பலன் கிடைக்கும்? சீர்திருத்த விஷயத்தில் சாஸ்திர சம்பிரதாயத்தை எடுத்துக் காட்டுகிறவர்களோடு வாதக்குக் கிஞ்சித்தும் அநுதாபங்கிடையாது. ஏனெனில் இத்தியாதி விஷயங்களில் சாஸ்திரங்கள் திறு திட்டமான வழியைக் கற்பிக்கமாட்டா என்பது திண்ணம். ஒரு விஷயத்தை காட்டுவதற்கு நாந்தியடிகள் சாஸ்திரங்களிலிருந்து இரண்டு ஸ்லோகங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டினால் அதற்குமாறாக கும்பகோணத்துப் பண்டிதர்கள் இருபது ஸ்லோகங்களை எடுத்துக்காட்டி வாதிப்பார்களே. புராதன சாஸ்திரங்களைத் துணைக்கொண்டு கிளம்பும் சீர்திருத்தக்காரர்கள் மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியவரே யாவார்கள். பசுத்தறிவு கொண்டு நிச்சயித்துக் கொள்ளக்கூடிய ஒழுக்க விதிகளுக்கெல்லாம் பழைய செல்லரித்துப்போன சாஸ்திரத்தைத் தேடியலைவதை விடக்கேடான அடிமை வாழ்வுவேறேயுண்டோ?

## தேசீயத் தொடர்பில் வலியற்ற பகுதி பிற்போக்கான வகுப்புகளே.

நமது சமுதாயத்தில் அடிப்படையான மாறுபாடுகள் ஏற்படவேண்டும்; ஜாதிக்கட்டு ஒழியவேண்டும்; என்பதைக் குறித்து இத்துணைத் தூரம் சொல்லவேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றிற்று. ஏனெனில் அடிப்படையான இந்தமாறுபாடு ஏற்படாத பட்சத்தில் வகுப்புவாரித் வக் கெடுதிகளை ஒழிக்கவேண்டும் என்று பேசுவதெல்லாம் யாதொரு பயனையும் தாராது. "சமுகச் சீர்திருத்தத்திற்கு சாதகமான வழிகள் இவைதாம்; இவ்வழிகளைக் கையாடித்தான் தீரவேண்டும்" என்று உறைத்துச் சொல்ல நமக்குத் திடமில்லையாயின் நமது செய்கையெல்லாம் வீண்செய்கையாய்க் கழியும்; காலமும் வீண் காலக்ஷேபமேயன்றோ. நமது நாட்டில் உள்ள மனோதிடம் வாய்ந்த பெரியோர்கள் 'ஜாதிக் கட்டு ஒழியட்டும்' என்று உறைத்துச்சொல்லமுற்பட்டு வருவார்களானால், இந்திய தேசீய வாழ்வு பலப்பட்டுப் போராற்றல் படைத்ததாகும்.

பிற்போக்கான வகுப்பினர் தமது சுயமரியாதையை வற்புறுத்த முற்படுவதுதான் இந்திய தேசீய வாழ்வு வளரவும், ஜனநாயகக் கொள்கை பரவவும் முக்கிய சாதனமாகும். இவ்வகுப்பினர் இருப்பதுதான் தேசீய வளர்ச்சிக்குத் தடையாகவுள்ளது. தேசீயச் சங்கிலித் தொடரில் வலிகெட்ட சங்கிலி இந்த வகுப்புத்தான். வகுப்புவாரிக் கூட்டங்கள் கூடித் தங்கள் ஒழுக்கநிலை, பொருளாதார நிலை இன்னும் விருத்தி செய்துகொள்ள முற்படுமானால் தேசீய அபிவிருத்திக்கு அது வெகுதூரம் உதவியாக இருக்கும். ஒரு வகுப்பு க்ஷேமமாக இருக்கவேண்டுமானால் அது பொருளாதார நிலையைத்தான் அடிப்படையாகக்கொண்டு நிற்கும். நாடார் மஹாஜன சங்கமானது தன் வகுப்பினரின் பொருளாதார நிலையை விருத்தி செய்யப் பலவேறு வழிகளில் முயன்று வருகின்றது என்பது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது. இந்த முறையில் நீங்கள் கூடிய மட்டிலும் அதிக பலனை அடையவேண்டுமாயின் நீங்கள் செய்யும் முயற்சி ஒழுங்காக இருக்கவேண்டும். நல்ல ஒத்துழைப்புடையதாக இருக்கவேண்டும்.

## சமுதாயவேலை நேர்வழியில் நிகழவேண்டும்.

சமுதாய வேலைகளும் உபகாரிக வேலைகளும் ஒருவராலேயோ, வகுப்புவாரிச் சங்கங்களாலேயோ ஏற்படுகின்றன. ஆனால் அவ்வேலைகள் சீர ஆலோசித்து கண்ட நிறதிட்டமான வழிகளில் நடைபெறுவது வருந்தத்தக்கதே. ஏதோ ஒரு சில ஏழைச் சிறுவர்களுக்கு பணவுதவி புரிதல், அல்லது ஒரு கூட்டுறவுச்சங்கத்தை ஸ்தாபித்தல் ஆகிய இவற்றைச் செய்துவிட்ட அளவிலே சமுதாய நன்மை நாடிய வேலைகளையெல்லாம் செய்தாய்விட்டது என்று நினைத்துக் கொள்வது சாதாரணமாக இருக்கிறது. இவ்வளவு செய்தும் நமது எண்ணம் ஈடேறவில்லையே; எண்ணிய அளவு பலிக்கவில்லையே என்றால் அதற்குக் காரணம் சிகிச்சா முறைகள் தக்கவழியில் கையாளப்படவில்லை என்பது தான். நம்முடைய நாட்டிலே சீர்திருத்த வேலையானது வெகு தாராளமான தோரணையில் செய்யவேண்டும். அப்படியிருக்க ஒருவரை மட்டில் நெருக்கித் திருப்பிவிட்டால் போதுமா? ஒரு வேளை அவ்வொருவர் முக்கியஸ்தராக இருக்கலாம். அவரை அவருடைய குடும்பம் ஊர் இதைவிட்டு விட்டுத் தனித்துவாச் செய்வது தருமமா? இக்காலத்தில் படித்த ஒருவன் தன் குடும்பத்தில், தன் சமூகத்தில், ஓரயலானைப் போல வாழுகின்றானே, இது எவ்வளவு பெரிய சங்கடம். இங்ஙனமாக அவன் தன் சுற்றுச் சார்புகளுக் கிணங்கி, தான் கலாசாலையிற் கற்ற உயரிய எண்ணங்களைப் பகற் கனவாக்கி விடுகின்றானே என்றால் அது ஓர் புதுமையா? ஒரு குடும்பமும் அது இருக்கும் கிராமமும் என்னும் இரண்டும் சமுதாயவேலைக்கு ஒருங்கே கட்டுப்பட்டதாகக் கணித்தல் வேண்டும்.

## கிராமப் புனர் நிர்மாணம்.

எந்த வகுப்பினராயினும் சரி கிராமப் புனர் நிர்மாணத் தொழிலை மேற்கொள்ளல் வேண்டும். மேற்கொண்டு அதிலுள்ள பொது ஜனங்களின் நிலைமையைப் பண்படுத்த முயலுதல் வேண்டும். சமுதாய வேலைக்கு கிராமச் சீர்திருத்தம் தான் முக்கியமானது. கிராமத்தானின் வாழ்க்கைக்குரிய எல்லா விஷயங்களிலும் சிந்தையைச் செலுத்துவது இன்றியமையாததாம். விவசாயிக்குக் குறைந்த வட்டிக்கு கடன் தந்துதவக்கூட்டுறவு முறையில் பாங்கு ஒன்றை ஸ்தாபித்து விட்டால் மட்டும் போதுமா? பாங்கியை ஏற்படுத்துவதோடு நில்லாமல், அந்த விவசாயியானவன் கடனிலே மூழ்கி விடாதபடி அவனுக்குக் கூட்டுறவு முறையையும் கற்பிக்கவும் வேண்டும். கலியாணச் செலவு சாவுச் செலவு, வியாச்சியப்பற்று, சிக்கனமின்மை, விளைவின்மை ஆகிய இவைகளே இந்தியாவில் ஒரு கிராமத்தானை கடனில் மூழ்கி விடச் செய்வதாகப் போகிய காரணங்களாம். கூட்டுறவுப் பாங்கி ஒரு கிராமத்தில் பெரும் பயனை அளிக்கவேண்டுமானால் கிராமவாசிக்கு விவாகாதி சடங்காசாரங்களில் அநாவசியமான அதிகச் செலவு செய்யாதபடி நன்றாய்க் கற்பிக்கவேண்டும். இங்ஙனம் அவனுக்கு பல வழியிலும் நல்லறிவுச் சுடர் கொழுத்தாதபடி அவனுக்குச் செய்யும் உதவியானது நிலைவரமான உதவியாகாது என்றுதான் சொல்லவேண்டும். இந்தியாவில் இருக்கும் ஜனங்கள் எல்லோருமே நாம் முன்னேற்றமடைய வேண்டும்; அதற்கு நம்மில் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கமில்லாதவராகவே இருக்கின்றனர். சமுக நிர்மாண வேலையின் முக்கிய நோக்கம் பொதுஜனங்களுடைய நோக்கத்தையே மாற்றுவதாக இருத்தல் அவசியமாகும்.

இந்திய கிராமங்களைப்பற்றி ஓராசிரியர் பின் வருமாறு தமது நூலில் எழுதியிருக்கிறார் "பிரிட்டிஷ் இந்தியாவில் ஐம்பது லக்ஷம் கிராமங்கள் மண் குடிசை நிறைந்தவைகளாயிருக்கின்றன. அநேகமாக அவைகளிலே ஒரு இடத்தில் மண்ணைவெட்டி யெடுத்துக்கொள்வார்கள். அங்கே ஒரு பெரிய பள்ளமாய்விடும். அதன் மேட்டிலே குடிசை கட்டி விடுவார்கள். ஒரு மழைபெய்தால் அந்த பள்ளத்தில் மழைநீர் நிரம்பிவிடும். அப்புறம் அதுதான் அந்த கிராமத்துக்குக்குளம் அதற்கப்புறம் அதிலேதான் அந்தக்கிராமத்தார் குளிப்பது, துணிமணிகளைத் தோய்ப்பது, பண்டம் பாத்திரங்களைத் துலக்குவது, கன்றுகாலிக்குத் தண்ணீர் காட்டுவது, சமையலுக்குத் தண்ணீர் மொண்டுகொள்வது. அந்த குட்டைப் பக்கத்திலேதான். ஜலமல விசர்ஜனம் செய்துகொள்வது, தாகசாந்தி செய்துகொள்வது. எல்லாம் அதிலேதான்" சாதாரணமான ஒரு இந்திய கிராமத்தைக்குறித்து இப்படிக்கற்பித்தது அதிக யோக்யதையாக இருப்பினும் இருக்கலாம். நம்முடைய கிராமாந்தரங்கள் சுகாதார விஷயங்களில் கவலையின்றி இருக்கின்றன என்பதைத்தான் இது நமக்கு நன்கெடுத்துக் காட்டுகின்றது. நாம் நமது புராதன நாகரீகத்தைப் பாராட்டி எவ்வளவு பெருமை பேசிக்கொண்டாலும் சுகாதாரம், நோயற்றவாழ்வு ஆகிய இவற்றில் நெடுங்கணக்குக் கூடனும் நாம் கற்றுக் கொள்ளாதிருக்கின்றோமே என்பதைக் கவனிக்கும்போது நாம் நாணித்தலை குனியவேண்டியதுதான். எந்தக் கிராமத்துக்குப்போனாலும், அங்கே முதலில் குப்பை கூளங்களையும் துர்நாற்றத்தையுமே காண்கின்றோம் என்றுதான் கூசாமல் சொல்லவேண்டியிருக்கிறது. இராப்பள்ளிக்கூடங்கள் எத்தனை ஏற்பட்டாலும் சரி; கூட்டுறவு பாங்குகள் எத்தனை ஏற்பட்டாலும் சரி அவைகளாலேயே ஒரு கிராமத்தின் சுகாதார நிலைமை சீர்பெற்றுவிடும் என்று சொல்ல முடியாது. நமது ஜன சமுதாயத்தின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும் அடியோடு மாற்றுதற்குரிய வழிவகைகளில் அவசியம் நமது கருத்தை நாம் செலுத்துதல் வேண்டும்.

## சிறுவருக்கோர் முயற்சித்துறை.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பல கிராமங்களிலே நாடார் வகுப்பினர்பெருங் குடிஜனங்களாக இருக்கின்றார்கள் என்று தோன்றுகிறது. இந்த கிராமங்களிலே உங்களுடைய சங்கமானது நிதானமாகவே பலன் படும்படியான வேலையைச் செய்ய இடம் ஏராளமாக இருக்கிறது. கிராம புனர் நிர்மாண வேலையில் உங்களிலே கல்விப்பேறடைந்த சிறுவர்கள் பெருமைக்காகவன்றி தேசியத்துக்காக உழைக்க வழியிருக்கின்றது. இவர்கள் தங்கள் காலத்தையும் முயற்சியையும் உத்தியோக நாட்டத்திலே செலவழித்து ஏமாற்றமடைய வேண்டிய அவசியமில்லையே. 'உன்னூர்க்குழை' என்பதை ஒவ்வொரு கல்விப் பேறடைந்த சிறுவனும், தனக்குரிய கடமையாகக் கொண்டொழுகட்டும். அப்போதைக்கப்போது சென்று பிரசங்கம் செய்வதினாலேயே கிராமங்களைச் சீர்திருத்திவிட முடியாது. சுகாதாரம், சுக பரிபாலனம், சிக்கனம், ஊரின் க்ஷேமத்தை நாடுதல் ஆகிய இவைகளையே தனது முழு நோக்கமாகக் கொண்டு உற்சாகத்தோடுழைக்கும் சிறுவர்களின் முயற்சியினாலே சீர்திருத்தம் கைகூடும். இந்தியாவானது தருமத்துத் தாயகமாயிருக்கலாம். அநேகமாக இந்தத் தருமங்களெல்லாம் நேரிய வழியில் நடைபெறுதல் இல்லை. துர்விநியோகமும் படுகின்றது. இப்போது நமது நாட்டிற்கு வேண்டியதெல்லாம், "தங்களைக் காட்டிலும் துர் அதிஷ்டத்தால் குறைவு பாட்டினையுடைய சகோதரர்கள் இருக்கும் இடங்களிலே அவர்களுடைய நிலைமையைப் பண்படுத்தத்தக்க வழியில் முயலுதற்குரிய உத்வேகமும் உபகார சிந்தையும் பெரிதுமவாய்ந்த சிறுவர்களேயாம்." பொது ஜனங்களை எல்லாவழியாலும் ஈடேற்ற வேண்டுமானால் இந்த நல்லுணர்ச்சியானது ஓங்கி வளர்தல்வேண்டும். உங்கள் வகுப்புச் சிறுவர்களுக்கு இதை நான் எடுத்துக் கூறுகையில் அவர்களுடைய ஜீவனத்துக்கு வழி என்ன என்பதை நான் மறந்துவிட்டதாகக் கொள்ளாதீர்கள். உங்களுடைய சங்கம்தான் உதவி செய்ய முற்படவேண்டும். நாடார்கள் எல்லாம் விவசாயச் செழிப்பும், வியாபாரச் செழிப்புமுடையவர்களே. உங்களுடைய வகுப்பாரின் முன்னேற்றத்தைக்குறித்து "மகமை" என்னும் சிறந்த மாமூல் படி பொருள் சேகரம் செய்கிறீர்கள் என்பதாகத் தெரிகிறது. தங்களுடைய சமுக வேலையைச் செய்துகொண்டு கிராமாந்தரங்களில் உழைக்கின்ற சிறுவர்களைக் காப்பாற்றுவதற்கு அந்த மகமைப் பணத்தில் ஒரு பகுதியைச் செலவிடுவதைவிடச் சிலாக்கியமான செலவினம் வேறே என்ன இருக்கின்றது?

மேல் வகுப்பினர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களோ, அவர்களுக்குள்ளே பால்ய விவாகம் வழக்கத்திலிருக்கிறது. அந்தக் கொடுமை உங்களுக்குள் இல்லாமலிருப்பது நீங்கள் செய்த புண்ணியம்தான். சமுதாய வாழ்க்கையின் மேம்பாட்டிற்கோர் அறிகுறி என்று கருதி இந்தக் கொடுமைகளை விலைக்குவாங்கி விடாதீர்கள். உங்களுக்குள்ளே கிறிஸ்து மதத்தை அவலம்பித்தவர்களிடத்து நீங்கள் காட்டும் சிநேக பாவத்

(இதன் தொடர்பு 5-ம் பக்கம்பார்க்க)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# ஸ்ரீமான் சி. வே. இரத்தினசாமி நாடாரவர்கள் வரவேற்புப் பிரசங்கம்.

## தக்கவாறு ஸ்தல ஸ்தாபனங்களில் இடம் பெறல் வேண்டும்.

### தூய வாழ்வுக்கும் ஏழைகள் பிழைப்புக்கும் உரியது கைராட்டினமும், கதருமே.

### பணக்காரர்கள் அற்பக் காரியங்கட்கு அள்ளி இறைக்கும் பணத்தை சமூக நன்மைக்கேன் உபயோகிக்கக்கூடாது?

கும்பகோணம் அக்டோபர் மீ 1உ

#### கல்வி.

நமது குலத்தோர்கள் முற்காலத்தில் அரசர்களாகவும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாகவும் நமது பெண்மணிகளும் புலமை நிரம்பியவர்களாக இருந்தார்களென்பதற்கு அனேக சான்றுகளுள: பிற்காலத்தில் சில சுயநல ஜாதியினர் பொறாமையினால் நம்மைத் தாழ்மைப்படுத்தக்கருதிய நோக்கம் கொண்டுள்ளார். ஆனால் தற்காலம் ஆங்கில அரசாட்சியின் கீழ் சகலருக்கும் சரிசம அந்தஸ்து உண்டென்றதின் பேரில் நாமும் இவ்வளவாவது கல்வி முன்னேற்றத்திற்கு வந்துள்ளோம். அப்பெருமையும் நமது கிருஸ்துவ சகோதரர்களாலுள்ளது என்பதை மறக்கற்பாலது. இன்னமும் நமது குலத்தவர்கள் வசிக்கும் அனேக கிராமங்களில் ஏழைகளாக உள்ளவர்கள் தங்கள் குழந்தைகள் ஆரம்பக் கல்வி கற்பதற்கு வசதியின்றி கஷ்டப்படுகின்றனர். அவைகளை நிவர்த்திக்கத்தக்க மார்க்கம் நாயிதுவரை ஏற்படுத்தினோமில்லை. ஆனால் நாம் நமது சொந்த முயற்சியால் நடத்திவரும் ஹைஸ்கூல்களைப்பற்றி பெருமை பேசிக்கொள்ளுகிறோம். அவைகளால் நாம் நன்மையடைந்தோமாயினும் அதனால் ஏற்படும் பூராப் பயன்களையும் அடைந்தோமில்லை. அதற்கு காரணம் நமக்கென்றே ஓர் உயர்தர காலேஜ் இல்லாதிருப்பதே. அப்படியிருந்தால் நம்மவரில் அனேக ஏழைகளாயுள்ள மாணவர்களை இலவசமாக கல்விகற்கச்செய்து வர்த்தகம் கைத்தொழில் உத்தியோகம் முதலியவைகளைச் செய்யச்செய்து பயன் தரத்தக்கபடி பொருள்பெற்று வாழலாம். இதற்குமுன் பத்து மகாநாடுகளில் அனேக அறிவிற்சிறந்த பெரியோர்கள் கல்வி விஷயமாக தக்க மேற்கோள்களுடன் எடுத்துரைத்தும் நாம் இன்னும் பிற்போக்குடையவர்களாகவே இருக்கிறோம். அதிலும் நமது சகோதரிகளின் கல்வி விஷயத்தில் தூங்கால் தூங்கும் நிலைமையிலுள்ளோம். ஆனால் ஆண்களும் பெண்களும் சரிசமானமான கல்விகற்றவர்களானால்தான் குடும்பமென்ற சக்கரத்தை நடத்திச்செல்வதற்கு ஏதுவாகும். நமது குலத்தில் சீமான்களாயுள்ளவர்கள் தங்கள் குழந்தைகளை உயர்தரக் கல்விகற்பதற்கு அனுப்புவதில்லை. அதன் காரணம் அவர்களுக்கு போதிய பொருளும் வியாபாரமுமிருப்பதாலேயாம். ஆனால் சனத்தையும் வர்த்தகத்தையும் தற்காலம் உயர்தரக் கல்வி இல்லாது நிர்வகிக்கமுடியாதென்பது உண்மையாகும். ஆனால் நீங்கள் நமது குலத்தின்பேரில் பூரண அன்புள்ளவர்களென்பது மெய்யேயானால் நமது குலத்தவர் வசிக்கும் ஒவ்வொரு பகுதியிலும் ஆரம்பக் கல்வியை கட்டாயக்கல்வியாகவும், நமது ஹைஸ்கூல்களுக்காக ஒரு காலேஜும் கட்டவும், கைத்தொழில் சாலைகளும் ஏற்படுத்தத் தீர்மானிப்பதோடு அன்னிய நாட்டிற்கு நமது குல அறிவில் சிறந்த மாணவர்களை அனுப்பி கல்வி கைத்தொழில் கூட்டுறவு முதலியவைகளைக் கற்றுவரச் செய்வதற்கும் வழிகாட்டவேண்டும். நமது குல மக்களும் தக்க நன்கொடை தந்து தங்களின் பொருளால் எற்படும் பெரும்புண்ணியப் பேற்றை அடைய கருணாநிதியாகிய கருணையங்கடவுள் கருணை செய்யப்பிரார்த்திக்கிறேன். தஞ்சை ஜில்லாவில் நாடார் பிரமுகர்கள் அனேக சத்திரங் கட்டிவைத்திருக்கிறார்கள். இன்னும் கட்டியும் வருகிறார்கள். இச்சத்திரங்கள் இக்காலத்தில் ...

...கடலை ஒரே மூச்சில் தாண்டினார். ஐரோப்பாவிலிருந்து ஆஸ்ட்ரேலியாவுக்கு இடையிற்றங்காமல் ஒரே பாய்ச்சலாய் ஆகாயவழி பறக்கப் பார்க்கும் இந்தக் காலத்தில் இந்த சத்திரங்கள் அவசியமில்லை என்று நான் சொல்லுகிறேன். வலை பின்னியது போல் பல ரயில் பாதைகள் ஏற்பட்ட பிறகு அனேக சத்திரங்கள் பாழடைந்து கிடக்கின்றன. சில சோம்பேறிகளுக்கும் துன்மார்க்கர்களுக்



உபசரணைக் கமிட்டி தலைவர்.

கும் வாசஸ்தலமாய்விட்டன. அவைகளெல்லாம் கல்விச் சாலைகளாகச் செய்தால் எவ்வளவோ பலன் தரத்தக்கதாயிருக்கு மென்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### வியாபாரம்.

நாம் வியாபாரத்தில் முற்போக்கடைந்தவர்களென்பது தான் எல்லோருடைய நோக்கம். ஆனால் நாம் இன்னமும் மற்ற தேசங்களிலுள்ள வியாபார முறைகளின்படி கூட்டுவர்த்தகம் குடியேற்ற நாட்டு வர்த்தகம் இவைகளைக் கைக்கொண்டோமில்லை. நம்மில் அனேகர் கல்கத்தா, பம்பாய், கராச்சி, பர்மா, இலங்கை இவைகளில் வியாபாரத்திற்குச் சென்றுள்ளாரேயானாலும் அவ்விடங்களிலுள்ள முக்கியமான வியாபாரங்களை ஏற்று நடத்திவந்ததாகத் தெரியவில்லை. நம் நாட்டிலிருந்து நமது சகோதரர்களாகிய தனவைசியர்களும் முஸ்லீம் சகோதரர்களும் மேற்கண்ட நாட்டிற்குச் சென்று கூட்டுறவால் பெரும் வியாபாரங்களை நடத்தி பெருஞ்செல்வந்தர்களாகுகிறார்கள். ஆனால் நாம் இன்னமும் நமது இராஜதானியின் ... செய்யவில்லை ...

...றினுமில்லை. அவ்விடத்தில் இங்கிலாந்து, ஜப்பான் முதலிய அன்னிய நாட்டு வியாபாரிகளும், குஜராத்தி, மஹாராஷ்டிரம், பார்ஸி முதலிய வியாபாரிகளும் அனேகமான வியாபாரங்களை தங்களுடையதாகக் கொண்டுள்ளார்கள். அவைகளில் நமது ஸ்ரீமான்கள் முயற்சி எடுத்துக்கொண்டால் இன்னமும் நமது குல ஏழை வாலிபர்களை வியாபாரத் தேர்ச்சியுடையச்செய்து தாங்களும் செல்வந்தராகலாம். கூட்டுறவால்தான் எந்த நாடும் அந்நாட்டுமக்களும் முன்னேற்றமடைந்தார்கள் என்பதை மீண்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். தற்கால உலகப் போக்கை உற்று நோக்கி வியாபாரத்தில் உன்னத பதவியை அடையும்படி கேட்டுக்கொள்கிறேன்.

#### தொழில்.

நமது நாடு விவசாயத்திற்குறைவிடமான பெரு நாடாயிருப்பினும்தொழில் முறையிலும் பூர்வகாலத்திற் பெயர் பெற்று வந்திருப்பதில் நமது ஜன சமூகம் சிறந்து விளங்கி வந்திருக்கிறது. கால மாறுதலால் நம்மிலும் வீட்டுத்தொழில்கள்நசித்துப்போய்விட்டது. நமது நாட்டுத்தொழில்கள் நசித்துப் போகாதிருக்கவேண்டுமானால் நம்மில்லறம் நல்லறமாக வேண்டுமானால் ஒவ்வொரு வீட்டிலும் நமது பழய ராட்டினங்கள் சுற்றவேண்டுமென்று மஹாத்மாகாந்தி சொன்ன ஆலோசனையை மேனாட்டாரும் மெச்சுகின்றார்கள். நாமேன் அப்பெரியாரின் சிறந்த கருத்தை சிரமேற்கொள்ளக்கூடாது? இது நமக்கொரு புது தொழிலுமல்ல. தென்னாட்டில் இன்னும் இச்சின்னங்கள் அழிந்துபோகவில்லை. திருநெல்வேலிஜில்லா திசையன்விளையில் நம்மவர்கள் தற்பொழுதும் நூற்றல் தொழிலைக் கையாண்டு சிறப்புற்று வாழ்ந்து வருகிறார்கள். ஆடம்பரத்தில் மூழ்கி அநாகரிகமிகுந்த நகரங்களில்தான் அத்தொழில்கள். நசிந்தனவேயன்றி கிராமங்களில் அழிந்து போகவில்லை. ஆயினும் தற்கால மாதர்கள் அதை பாட்டிதொழிலென்று பராமுகமாய் விட்டுவருகிறார்கள். அப்படிக் கெட்டுப்போகாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய முக்கியமான கடமையாகும். இன்னும் நமது சமூகப் பொருளாதார நிலைமை விருத்திக்கும் ஒழுக்கத்துக்கும் ஏற்றமுடைய எல்லாத் தொழில்களையும் செய்வது கிரமமாகும். ஆலைத்தொழிலை உண்டாக்கி ... பொருந்து குடிசைத் தொழிலில் (வீட்டுத்தொழிலே) தேசத்தில் பொருளாதாரத்தை விருத்தி செய்யவல்லதென்றும் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கக்கூடியதென்றும் கூறிவருகிறார்கள். ஆனதால் ஒவ்வொருவரும் நமது நாட்டு கைத்தொழிலை நம் ஜாதியினர் விசேஷமாகக் கையாடும் முறையில் கங்கணம் கட்டி உழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

#### கதர்.

அந்நிய தேசங்களுக்கு ஆடைகளை அனுப்பி மானம் காத்த நம் பாரத நாட்டிற்கு கதர் என்னும் இயக்கமுண்டானதும் அதற்காக காந்தி மகான் பிறந்திருக்கிறாரென்று சொல்வதும் ஆச்சரியப் படத்தக்கதுதான். ஆனால் உண்மையான வீரன் போர்க்களத்தில் தனது சேனைகள் எதிரிகளால் மாண்டு போவதை எவ்வாறு பார்த்துக்கொண்டு புன்முறுவல் கொள்ளானோ அவ்வாறே மேனாட்டு தேசத்துப் போலி வஸ்திரங்கள் நாட்டு நாகரீக உடையைக் கழுத்தை முறித்துக் கொல்வதை ஒரு உண்மையான இந்தியன் பார்த்து ஆச்சர்யப்பட்டுக்கொண்டிருக்க மாட்டான். இது விஷயமாய் நம்மில்அனேகர் நன்கு தெரிந்திருப்பார்களாகையால் விசேஷமாய் நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. நாட்டபிவிர்த்திக்கும், மக்கள் சுகம்புறத் தூய்மைக்கும், ஆடவர் பெண்டிர் கற்புக்கும், உயர்வு தாழ்வை சமன் செய்து சன்மார்க்கத்தை விர்த்தி பண்ணுவதற்கும், ஆத்ம மோக்ஷத்திற்கும் கூட கதரில் அர்த்தமிருக்கிறதென்று தைரியமாய்ச் சொல்ல முடியும். என்னுடைய தைரியத்தை சோதித்துக் கொண்டிருக்க நேரமில்லை. குற்றமிருந்தால் மன்னித்துவிட்டு நமது குலத்தவர்கள் கட்டும் பந்தயத்திலும் மற்றவர்களை ஜெயித்துவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

#### பாங்கு.

நமது ஆறுவது மகாநாட்டில் நம்மவர்களுக்காக இருபது லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் பாங்கு ஒன்று திட்டம் செய்தோம். ஆனால் எக்காரணத்தைக்கொண்டு அப்பாங்கு திட்டம் செய்தோமோ அக்காரணத்தைச் செய்யத்தக்க பங்குதாரர்கள் சேராமல் சிறு பங்குதாரர்களைக் கொண்டதாக இருப்பதால், நம் சங்கத்திற்காக நமது குல ஜனங்களின் க்ஷேமத்திற்காவது ஒருவித நன்மையும் பெறக்கூடாததாகவிருக்கிறது. நீங்கள் அன்று வாக்குறுதி செய்தபடி பாங்கியின் பாக்கி பங்குதாரர்களாக சேர்ந்து உன்னத நிலைமைக்குக் கொண்டுவர முன் வருவீர்களென நம்புகிறேன். சங்கத்திற்காகத் தீர்மானித்த வீதத்தைப் பெற்று சங்க வருவாயை அதிகரிக்கச் செய்ய ஏதுகரமாகும். துரதிஷ்டவசமாக சங்கத்திற்கும் பாங்கிற்கும் சிறிது பிணக்கு ஏற்பட்டது. அதை நிவர்த்திப்பதற்காக நியமிக்கப்பட்ட பெரும் தலைவர்களடங்கிய கமிட்டியாவது இதுவரை அது விஷயமாய் எவ்வித முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இது மிகவும் வருந்தத்தக்கதே. இனியாவது அக்கமிட்டியார் தங்களது கடமையைச் செய்து பாங்கிற்கும் சங்கத்திற்கும் உள்ள பிணக்கைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். பாங்கின் டைரெக்டர்களும் தங்களது சிரமத்தைக் கருதாது சுற்றுப்பிரயாணம் செய்து பாங்கைப்பூர்த்திசெய்து வைக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களென எதிர்பார்க்கிறேன்.

#### மகமை.

மகமையாலே நாம் உலகில் மகிமையடைந்துள்ளோம். ஆனால் நம்மில் சில ஊர்களிலுள்ளவர்கள் மகமைப் பணத்தை தகாதவழிகளில் உபயோகப்படுத்துகிறார்களென்பது பல சந்தர்ப்பங்களில் வெளிவந்துள்ளது. அனேகமாயிரங்களான மகமைப் பணங்கள் கேட்பாரற்று சுயநலக்காரியங்களுடையவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு ஒருவித நன்மையும் செய்யமுடியாத நிலைமையிலுள்ளது. அவைகளை நமது தலைவர்கள் சீர்திருத்திவைக்க முயற்சிக்கவேண்டும். நமது மகமைகளில் ஓர் பாகத்தை நம் சங்கத்திற்காக கொடுத்துதவ வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு ஊரிலுமுள்ள நம் தலைவர்கள் அவைகளை அத்தலத்து...

(இதன் தொடர்பு ஆ. பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(௬. பக்கத்தின் தொடர்ச்சி.)

ளுள்ளவர்களுக்கே பயன்பெறச் செய்யவேண்டுமென்றே கூறிவிடுகின்றனர். அதோடு தக்ஷிணமாற நாடார்கள் மகமையென்றும் உத்தர நாடார்கள் மகமையென்றும் வேற்றுமை யுண்ணி ஆக்ஷேபணையும் செய்கிறார்கள், ஆனதால் அவைகளையெல்லாம் சீர்திருத்த முற்கூறிய அத்தலத்திலுள்ள திறன் பெறும் காரியங்களுக்குச்செலவுசெய்யத் தகுந்த நிர்வாக திறமையுடையோர்களை நியமனஞ்செய்தும் நமது சங்கத்திற்காகத் தனியே அகில நாடார்கள் மகமை என்ற ஓர் மகமைப் பண்டு எல்லா ஊர்களிலும் ஒரு குறித்த அளவு தொகையாக ஏற்படுத்தி அவைகளை வசூலித்து சங்கத்திற்கு பொருள் பெருகுவதற்கு மார்க்கத்தையும் செய்யலாமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தற்கால தேச நிகழ்ச்சி.

நமது நாட்டில் பல அரசியல் கக்ஷிகள் தோன்றி பிறப்பினாலாவது தொழிலினாலாவது உயர்வு, தாழ்வு கொள்ளல் கூடாதெனவும் எங்கும் சகோதரமும் சமத்துவமும் நிலவ வேண்டுமெனவும் பேரிடி முழக்கமுழங்கியும் இன்னும் சில சுயநலக் காரர்களும் சில சுதேசிய வீரர்கள் என்று வாய்ப்பறையடிக்கும் போலி சுதேச பக்தர்களும் தங்கள் ஜாதி இறுமாப்பை விட்டுவிட முன் வந்தார்களில்லை. இது ஒருவகை ஜாதியாரிடமட்டுமல்லாமல் தாங்களே உயர்ந்தோர்களென்று சொல்லிக் கொள்ளும் அனேக ஜாதியார்களிடத்திலும் அச்சாதிப்பேய் அவர்களைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அவ்வித சுபாவ முள்ளவர்கள் நமக்கு அனுதாபங் கொள்வதென்பது கனவேயாம். உலகில் சகல மக்களும் கடவுளின் படைப்பால் சரிசமானமானது என்ற பெரும் நோக்கம் மற்றையோர்களிடம் உண்டாகும் வரை நாம் நம் சுயமுயற்சியோடு முன்னேற்றமடையவேண்டுமென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நம்மவர்களிலும் உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமையுற்று ஒற்றுமையின்றி கக்ஷி பேதங்களால் குல முன்னேற்றத்திற்காகிய காரியங்களை செய்வதற்குத் தடைகளாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனதிலுள்ள வேற்றுமையை யகற்றி பெருந்தன்மையும் பெரும் நோக்கமும் கொண்டு நடப்பார்களேயானால் நாம் இன்னும் மேன்மையுறலாம். தவிர பலரால் வெறுக்கத்தக்கதுமான மதுத் தொழிலை பல ஜாதியார்களும் பகிரங்கமாய் நடத்துகிறார்கள். கள்ளுங் குடிக்கவும் செய்கிறார்கள். எனினும் அப்பழியை நம் தலைமேற் சுமத்திவருகிறார்களாதலால் நம் குலத்தவர்கள் சிறுபான்மையோர் செய்யும் காரியத்தை (தொழிலை) அறவே ஒழித்துவிட்டார்களேயானால் அதுவே சகல மேன்மையான புவன போகங்களைத் தரத்தக்க சஞ்சீவியாகும். நமது குலத்திற்கும் நாட்டிற்கும் நன்மை செய்தவர்களாவோம்.

## வாலிபரியக்கம்.

நமது குலத்திலுதித்த இளஞ்சிங்கங்களாகிய வாலிப வீரர்களே! நீங்களாவது நமது குலத்தவர்களுள்ள ஒவ்வொரு ஊரிலும் சங்கம் ஏற்படுத்தி ஒவ்வொருவரும் அவரவர் பிறந்த குலத்திற்குத் தொண்டு செய்தால்தான் அக்குலம் முன்னேற்றமடையும். எந்த தேசமும் அந்தேச வாலிபர்களாலேதான் முன்னேற்றமடைந்துள்ளது. ஆகையால் நமது வாலிப சகோதரர்கள் சங்கத்தில் சேர்ந்து தளரா ஊக்கத்தோடு வேலை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தலைக்கட்டுவரி ஏற்படுத்திய பின்பு ஓர் வரியாவது இன்னும் சரிவர வசூலிக்கவில்லை. தலைக்கட்டுக்கு ரூபாய் கொடுக்க நம் குலத்தவர்களால் முடியாத காரியமல்ல. கொடுக்கவும் தயார்தான்; ஆனால் யார் முன்னின்று வசூல் செய்கிறது? அதற்குத்தான் தக்க தலைவர்களில்லை. நம்மில் அனேக ஊர்களில் தக்க தலைவர்கள் இருந்தும் இல்லை என்றே சொல்லவேண்டியதோடு, அவர்களுள் அற்பகாரிய பதவி முதலியவைகளுக்காக வேற்றுமையுற்று தங்கள் அருமையான பொருளை வீண் விவகாரங்களுக்கு வாரி இறைக்கிறார்கள். அதோடு பெ [illegible] செய்கின்றனர். அப்படித் தகாத காரியங்களில் செலவு செய்யும் பெரும் பணத்தை நம் குல முன்னேற்றத்திற்கு உதவினால் அவர்களுக்கு உலகமுள்ளளவும் கீர்த்தி நிலைத்திருக்கும். அவ்விதம் அவர்களுக்கு நல் எண்ணத்தை உண்டாக்க ஈசன்கிருபை செய்யப் பிரார்த்திக்கிறேன்.

## சங்கம்.

தற்கால உலகத்தில் நமக்குச் சரியான வழிகாட்டக்கூடியது நமது தலைச் சங்கமாகிய நாடார்மஹாஜன சங்கமென்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அது நமக்குச் செய்துவந்திருக்கிற நன்மைகளை இலைமறை காய்போல் பல இருக்கின்றன. இன்னும் நமக்குச் செய்யவேண்டிய நன்மைகளுமிருக்கின்றன. நம்மை புது உலகத்தில் பாதுகாக்கும் சர்வ சக்தியும் அதற்குண்டென்பதே எமது நம்பிக்கை.

பிராமணர் பிராமணரல்லாதார் என்ற பாகுபாட்டில் நமது ஜன விதாச்சாரப்படி அரசாங்கத்தாரால் நமக்குச் சரியான சுதந்தரம் அளிக்கப்படவில்லை. அரசியல் வாதிகளும் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. எந்த வகுப்பார் அரசியல் தலைவராய் வருகிறார்களோ அந்த வகுப்பாரும் அவர்களைச் சார்ந்தோருமே அரசாங்கப் பட்டம் பதவிகளைக் கொள்ளையடித்துக்கொண்டு போகிறார்கள். அதிகாரவர்க்கமும் அதற்கேற்றவாறுதான் நடித்துவருகிறது. லார்டு பெண்ட்லண்டு ஒரு பக்கம் சாய்ந்தார்; வில்லிங்டன் பிரபு இரண்டு பக்கத்திலும் கைவைத்தார்; கோஷன் பிரபு அந்த குணமே மாறி மறுபக்கம் சாய்ந்துவிட்டார். இந்தக் கொள்கையால் நாடார்களுக்கென்ன லாபமென்று தேடிப் பார்த்தாலும் ஒன்றும் கிடைக்கவில்லை. பி. ஏ. பி. எல். முதலிய பட்டம்பெற்றவர்கள் நாடார்களில்லையா, ஜமீன்தார், மிராசுதார்களில்லையா இவைகளையெல்லாம் கவனிக்கும்படி நாம் சரியான கிளர்ச்சி செய்யவேண்டும். அதற்கு நமது சங்கத்தின் பலம் அதிகமாக வேண்டும். தவிர ஸ்தல ஸ்தாபனங்களிலும் நமக்குப் போதுமான நியமனங்கள் கிடைக்கவில்லை. ஜனப்பெருக்குள்ள ஜில்லா, தாலுக்கா போர்டுகளில் நாடார்கள் பிரதிநிதிகள் நியமன மதிகமாக வேண்டும். சென்னை சட்டசபைக்கு நம்குலப் பிரதிநிதிகளாக இரண்டு பெயர்களை நாமினேஷன் மூலம் தெரிந்தெடுக்கும்படி நாம் கிளர்ச்சி செய்வதுடன் நமது மஹாஜன சங்கத்தார் தேர்ந்தெடுப்பவர்களையே நியமனஞ் செய்யும்படி கவர்மெண்டுக்கு வற்புறுத்த வேண்டும். இந்திய சட்டசபையிலும் நமக்கு ஒரு ஸ்தானமாவது கட்டாயம் வேண்டுமென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டும். இதற்கெல்லாம் சங்கத்தின் மூலமாகக் கிளர்ச்சி செய்தால்தான் பலன் தரக்கூடும். ஆகையால் நமது தாய்ச்சங்கத்திற்கு போதுமான மெம்பர்கள் சேர்த்து அதனால்வரும் பிரயோஜனங்களை விருத்தி செய்வது நாம் ஒவ்வொருவரும் தணிவு கொள்ளவேண்டுமென்பது மிகையாது.

தேவஸ்தான சீர்திருத்தச் சட்டம் பொதுவாக தேசத்திற்கு மிக்க நலந்தரத்தக்கதென்றாலும் நம்முடைய தேவஸ்தானங்களுக்கு மிக்கக்கேடான சட்டமாகும். இச்சட்டமியற்றும் போது பாதகமான அம்சங்களிருந்தால் பின்பு திருத்திக்கொள்ளலாமென்று சொன்னவர்களும் பாதகமிருக்கிறதென்று எடுத்துக்காட்டியவர்களும் இன்னும் சென்னை சட்டசபையிலிருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள் மந்திரிகளாகி இந்திரபோகத்திலிருக்க தந்திரங்களெல்லாம் செய்கிறார்களேயன்றி நேற்று எதைப் பேசினோம்; இன்று என்ன செய்கிறோம் என்பதை மறந்து போகிறார்கள். அதுதான் அவர்கள் வேலையாகவுமிருக்கிறது. தற்போதுள்ள மந்திரி சபையார் ஏதோ திருத்தஞ் செய்யப் போவதாகப் பேசிவருகிறார்கள். இத்திருத்தத்திலாவது நம்முடைய தேவஸ்தானங்களுக்கும் பாதகமான ஷரத்துக்களை எடுத்துவிடும்படி நாமின்று முதல் பலத்த கிளர்ச்சி செய்யவேண்டும். இதற்கு நமது சங்கத்தைத்தான் [illegible] வேண்டும். இது விஷயமாய் நமது பிரதிநிதிகள் தகுந்த முயற்சி எடுப்பார்களென்றும் நம்புகிறேன்.

## பத்திரிகை.

பத்திரிகையின் பிரயோஜனம் தற்காலம் தாய்பாஷையில் வெளிவருதலாவும் பத்திரிகைகளே நமக்கு நேத்திரம் போன்றுள்ளது. ஆனால் நம் குலத்திற்கு தொண்டியற்ற வேண்டி குலப்பத்திரிகைகள் அனேகம் வெளிவந்துள்ளன. ஆனால் அவைகளை நீங்கள் சரிவர ஆதரியாதிருந்ததால் அவைகள் இது சமயம் நின்றிருந்தாலும் நமது "நாடார்குல மித்திரன்", "நாடார் நண்பன்" இவைகள் வளர்பிறைச் சந்திரன்போல் பிரகாசித்து வருகின்றன. ஆனாலும் அவைகளில் ஒன்றையாவது வாரம் இருமுறை வெளிவரும்படி வேண்டியஆதரவளித்து வர்த்தமானங்களோடு வர்த்தகர்களுக்கு முக்கிய சரக்குகளின் முதல் ஸ்தலத்தின் விலையை அப்போதைக்கப்போது பிரசுரிக்கத்தக்கதாக செய்வித்து வர்த்தக மித்திரனாகவும் செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

## ஏனாதி நாதர்.

இவர் நம் குலத்தில் பிறந்த மகாவீரராவர். அவருடைய சரித்திரம் பெரிய புராணத்தில் சேக்கிழார் வெகு தெளிவாக எழுதியிருக்கிறார். அவருடைய பிறப்பிடம் எயினனூர் என்பதாகும். அது எனனூரென்று மருவி இக்கும்பகோணத்திற்கு சமீபத்தில் இருக்கிறது. அவருக்கு சிவ ஆலயந்தோறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் சிலை ஸ்தாபனஞ் செய்து வணங்கி வருகிறார்கள். என்றாலும் தனியாக வேறெங்கும் ஆலயம் இல்லை யென்றுதான் கேள்வி. இது அவ்வீரர் பிறப்பிடமாதலால் அவருடைய ஞாபகார்த்தமாக தனியாக ஆலயம் சமைத்திருக்க வேண்டுமென்ற நம்பிக்கை உண்டாக்க புராதன ஆலயம் சிதைவுற்றிருக்கிறதை திருப்பணி செய்து நம்குல திலகமாகிய அவ்வீரர் திருநாளை நாமெல்லோரும் கொண்டாடவேண்டும். அவருடைய ஜீவகாருண்யமுள்ள சரித்திரத்தை நம் பாடசாலைகளிற் பாடப் புஸ்தகங்களாக வைக்கவும் செய்யலாம். கீர்த்தி பெற்ற நம் முன்னோர்களை நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களுடைய புகழைப்போற்றி வணங்கவும் வேண்டும்.

அவர் சிறந்த யுத்தவீரனாக இருந்தும் சத்திய தர்மப்படி போர்த்தொழிலாகினாரா யிருந்தும் நெறிமுறை தவறாமல் தம்முயிர்போகும் தருவாயிலும் ஜீவகாருண்யச் செல்வராய் விளங்கியுள்ளார். ஆகையால் அவர் வழி வந்த நாமும் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித் தொழுகுதல் வேண்டும். தேவாலயங்களில் உயிர்ப் பலியிடும் வழக்கத்தை அடியோடு ஒழிக்கவேண்டும். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திரு உபதேசத்தை உற்று நோக்கி ஜீவகாருண்யத்தில் சிறந்திலங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## தீண்டாமை.

களங்கமற்ற நம் பாரத நாட்டில் தீண்டாமை யென்னும் கொடிய விஷம் சுயநலக்காரர்களால் இடைக்காலத்தில் பரப்பப்பட்டு விட்டது. அதனால் நம் தமிழ் நாட்டின்புராதனப் பெருமையும், வளப்பும், செழிப்பும் குறைந்துகொண்டுதான் வருகின்றன. இக்கொடுமை பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபிறகு ஒருவாறு தணியத் தலைப்பட்டதென்றாலும் ஆக்ஷிக்காரர்களால் வெள்ளைக்காரன் விஷயம் என்ற உயர்வைக்கொடுத்து தீண்டாமை விஷம் வெள்ளைக்காரரிடமும் புகப்பார்த்தது. சில விடங்களிற் புகுந்துமிருந்தது. நல்ல காலத்திற்கு மகாத்மா காந்தி, தீண்டாமைக்கு அர்த்தமில்லை; அது கொடிதினும் கொடிது; கெடுதும் நம் நல்வாழ்க்கைக்கு கேடுகுமென்று களங்கமற விளக்கி ஒரு புதிய சகாப்தத்தை உண்டுபண்ணி விட்டார். பகவான் அர்ஜுனனுடைய மன மயக்கத்தை போர்க்களத்தில் மாற்றியதைப்போல் யாருக்கும் அஞ்சாத சிங்கக் குட்டி என்ற [illegible] சொல்லப்படுவோருடைய உள்ளத்திலும் திடமுண்டாகச் செய்துவிட்டார். ஆகையால் அவர்களுடைய சுயமரியாதையின் உத்வேகத்தைத் தடுக்க முடியாது. ஆயினும் தீண்டாமை விஷத்திற்கும் பரிகார முயற்சிக்கும் நம்மாலானதைத் திரிகரணசுத்தியுடன் செய்வது முக்கியமான தர்மமாகும். நமது பாடசாலைகளில் அவர்கள் பிள்ளைகளைத் தாராளமாகச் சேர்த்து இலவசமாய்ப் படிக்கவைத்தால் புகழும், புண்ணியமு முண்டென்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## முடிவுரை.

பொறுமையானரே! உங்கள் அருமையான காலத்தை நான் அனுவசியமாகக் கடத்திவிட்டதாக நினைத்திருக்கலாம். இருந்தாலும் என் மனதில் தோன்றும் சில விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்ற அவா கொள்வதால் இரண்டொன்றைச் சொல்லிவிட்டு என் விரிவுரையை நிறுத்திக்கொள்கிறேன். நமது முன்னேற்றமே அவரின் நோக்காகக் கொண்டு நமது சங்கத்திற்கு கௌரவ அக்கிராசனம் வகிக்க மனமுவந்து இங்கு விஜயம் செய்திருக்கும் உயர் திருவாளர், இந்திய சட்டசபை அக்கிராசனராகிய ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பி. ஏ. பி. எல். அவர்கள் அரிய வழியைக் கடைப்பிடித்து வேண்டுவன செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்யப் பிரார்த்திக்கிறேன். வழக்கம்போல நமது மகாநாடு ஆடம்பரமாகக் கூடிய முதல் நாளே சில பிரபுக்கள் அடுத்த ரயிலில் புறப்படும் நேரம் தெரிந்துவைத்துக் கொண்டு அவைகளிற் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டுவிடாமல் இங்கு விஜயம் செய்திருக்கும் எல்லோரும் நம் குல முன்னேற்றமடையும் காரியங்களை தீவிரமாய்ச் செய்தால்தான் நன்மைதருமென்பதை நான் சொல்லத் தேவையில்லை. சென்ற மகாநாட்டில் தீர்மானித்து வெற்றிபெற நடத்திய ஏழை மாணவர் காலர்ஷிப் லாட்டரி சீட்டின் லாபத் தொகை பெருத்ததென நினைத்து அவைகளை செலவு செய்துவிட கருத்தோடில்லாமல் அதற்கு மேலும் மேலும் பொருள் சேர்த்து அவைகளை நமது நாடார் பாங்கியில் போட்டு அதனால் வரும் வட்டியைச் செலவு செய்துவர ஒரு திட்டம் செய்யுங்கள்.

அரசியல் விஷயத்தில் நாம் வெகு ஜாக்கிரதையாகவே இருந்து வந்திருக்கிறோம்; வருகிறோமாயினும் ஸ்தல ஸ்தாபன நிர்வாக விஷயங்களில் தலையிடும் காரணத்தால் நமக்கு நா[...]மான கட்டுப்பாடுகளை சீர்குலை[...] விட்டுவருகிறோம். அவ்விஷயத்தில் தலைவர்களே பொறுமையை இழந்து விடுகிறார்கள். முக்கியமாய் இவ்விஷயத்தில் பொறுமையுடன் விட்டுக்கொடுக்கும் சுபாவம் இருக்கவேண்டுமென்பதை மரியாதையுடன் தெரிவித்துக் கொள்வதோடு நம் ஜாதியினர்களுக்குள் போட்டி அபேக்ஷகர்கள் ஏற்பட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ளுமாறு ஆங்காங்குள்ள முக்கியஸ்தர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிலரின் நோக்கம் முற்காலத்தில் நம்மவர்களுக்கு அனேக இடங்களில் வாங்கியிருக்கும் கட்டடங்களைப்போல வாங்கி அவைகளை வாடகைக்கு விட்டு அதன் வருவாயைச் செலவு செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு தீர்மானம் செய்துள்ளார்கள். ஆனால் அவை நன்மை தரத்தக்கதாயினும் அனேக அபிப்பிராய பேதங்கள் பிற்காலத்தில் ஏற்படச் செய்யும். உதாரணமாக நமது பொதுச் சொத்துகள் உள்ள அனேக இடங்களில் இவ்வித நிலைமை ஏற்பட்டிருப்பதைக் காணலாம். தன வைசியர்கள் பொது பணங்கள் எத்தனை கோடி ரூபாய் ஆனாலும் அவைகளை ரொக்க லேவாதேவி செய்து அதன் வட்டித் தொகையைக் கொண்டே அனேக நன்மையான காரியங்களைச் செய்து முடிக்கின்றனர். ஆனதால் இவைகளை எல்லாம் உணர்ந்து உங்கள் மனதுக்கு எது [...] யென்று தோன்றுகிறதோ அவைகளை தீர்மானஞ் செய்து காரியசித்தியடையும்படி செய்யுங்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection